ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : **பி. வீரராகவன்**

ஆண்டுச் சந்தா ரூ. 5] **[தனி இதழ் 50 ந. பை.**

மலர் 33	பிப்ரவரி 1969	இதழ் 2

இதயங்களை வென்ற இணையற்ற தலைவர்

திராவிட முன்னேற்றக் கழகம், அதன் தாயாகவும் தந்தையாகவும் விளங்கிய தன்னேரிலாத் தலைவரை இழந்து தவிக்கிறது.

தமிழ்த் திரு நாடு, அதன் வலிவும் பொலிவும் பெருகுவதற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்த அறிஞர் பெருமகனைப் பறி கொடுத்துப் புலம்புகிறது.

தமிழ்ப் பெருங்குடி மக்கள், தங்களுடைய இதயங்களில் எல்லாம் தங்கச் சிம்மாதனம் போட்டு வீற்றிருந்த அரும் பெறல் அண்ணலை இழந்து தத்தளிக்கின்றனர்.

இந்தியப் பெரு நாடு, அதன் உண்மையான ஒருமைப் பாட்டுக்காகவும் உறுதியான முன்னேற்றத்திற்காகவும் திட்டவட்டமான

முறையில் பணியாற்றி வந்த தலைசிறந்த இராஜதந்திரியைப் பறிகொடுத்துக் கண்ணீர் வடிக்கிறது.

அரசியல் உலகம், அறிநெறியையும் கண்ணியத்தையும் பெருந்தன்மையையும் விவேகத்தையும் நிதானத்தையும் ஒருங்கே பெற்றிருந்த இணையற்ற தலைவரை இழந்து கதறிக் கொண்டிருக்கிறது

தனக்கு உவமை இல்லாத பேச்சாளராய், ஈடு இணையற்ற எழுத்தாளராய், அனைவரையும் கவர்ந்திருக்கும் பத்திரிகாசிரியராய், அழகழகான நாடகங்களை அணி அணியாக இயற்றித்தந்த அற்புதக் கலைஞராய், தலைசிறந்த நடிகர்களும் கண்டு பொறாமைப் படத்தக்க நடிப்பாற்றல் மிக்கவராய், கேட்டாரைப் பிணிக்கும் தகைமையுடைய பாராளுமன்ற வாதியாய், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் அரசியல் தலைவராய், மாற்றுக் கட்சியினரும் மனம் மகிழ்ந்து பாராட்டவல்ல பெருந்தகைமைப் பண்புடையவராய், தமிழ் மொழியின் பெருமையையும் தொன்மையையும் உலகம் முழுவதற்கும் உணர்த்திய ஓங்குபுகழ் படைத்தவராய், கோடிக் கணக்கான இதயங்களை வென்ற இணையற்ற வெற்றி வீரராய் ஒளி வீசித் திகழ்ந்த உத்தமப் பெருந் தலைவர்—சிந்தனைத் திறம் மிகுந்த சீர்திருத்தச் செம்மல்—இளைஞர் சமுதாயத்தின் இலட்சிய கீதம்—பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்துவிட்டார்கள்.

பிப்ரவரித் திங்கள் மூன்றாம் நாள் பொழுது விடிந்த போது, மரணத்தின் கொடிய கைகள் அண்ணாவின் அருமைத் திருமேனியை அணைத்துக் கொண்டுவிட்டன என்னும் செய்தி, நஞ்சு தோய்ந்த வேலாகப் பாய்ந்து தமிழ் மக்களின் இதயங்களை யெல்லாம் வேதனைத் தீயில் வீழ்த்திவிட்டது.

வானொலியின் வாயிலாகவும் செய்தித் தாள்களின் மூலமாகவும் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்ததும் தமிழகம் முழுவதுமே கண்ணீர்க் கடலில் மிதக்கும் ஒரு சோக குடும்பமாக மாறிவிட்டது.

செய்தியை அறிந்ததும் செய்வதறியாது தத்தளித்தனர் மக்கள். கண்ணீர் பெருக்கிக் கதறி அழுதனர் பல்லாயிரவர்; 'ஐயகோ அண்ணா' என்று அரற்றிப் புலம்பினர் பல்லாயிரவர்; தரையில் புரண்டு புரண்டு கூவிக் கதறினர் பல்லாயிரவர்; தலையை முட்டி மோதி நெஞ்சம் உடைந்து தவித்தனர் பல்லாயிரவர்; முகத்திலும் மார்பிலும் அடித்துக்

கொண்டு மயங்கி வீழ்ந்தனர் பல்லாயிரவர். எங்கும் துயரம்; எங்கும் வேதனை; எங்கும் கண்ணீர்; எங்கும் கதறல்; எல்லாச் சாதியினரும் எல்லா மதத்தினரும் எல்லாக் கட்சியினரும் எல்லாக் கொள்கையினரும் எல்லா வயதினரும் எல்லாத் தொழிலினரும் துயரம் தாளாமல் தேம்பித் தேம்பிக் கதறி அழுது கண்ணீர் வடித்தனர்.

தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தமிழ் மக்கள் உலகில் எங்கெங்கே வாழ்கிறார்களோ அங்கெல்லாம், துயரம் பொங்கிப் பெருகியது: வேதனை, அலைமோதி எழுந்தது. இலங்கையில், பர்மாவில், மலேசியாவில், சிங்கப்பூரில், கனடாவில், ஜெர்மனியில், ஆப்ரிக்காவில், எங்கும், எங்கெங்கும் உள்ள தமிழர்களின் கண்கள் குளமாயின; இதயங்கள் கண்ணீர் வடித்தன; குடும்பங்கள் வேதனையின் கூடாரங்களாயின.

அறிஞர் அண்ணா அவர்களுடைய அருமைத் திருமேனியின் இறுதி ஊர்வலம் நடைபெற்ற பிப்ரவரி 4-ஆம் நாளன்று, சென்னை மாநகரில் திரண்டிருந்த மக்கட் கடலின் பேரளவு, தமிழக வரலாறு கண்டறியாத ஓர் அற்புதம். அண்ணா அவர்களின் பொன்னுடல் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த ராஜாஜி மண்டபத்திலிருந்து, அண்ணா அவர்களின் மீளாத நெடுந்துயிலுக்கு ஏற்ற இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மெரினா கடற்கரை வரையில் ஏறத்தாழ ஏழு மைல் தூரம். அன்றைய தினம் எங்கு நோக்கினாலும் மக்கள் தலைகளே தென்பட்டன. பாதைகளின் இருமருங்குகள், கடைகள், கட்டிடங்கள், மர உச்சிகள், விளக்குக் கம்பங்கள், எங்கும் மக்கள்; எங்கும் மக்கள். கண்ணீர் வடித்தபடி, தேம்பி அழுதபடி, அழுது அரற்றியபடி, மக்கள் வெள்ளமே, எல்லா இடங்களிலும் மல்கிப் பெருகித் திரண்டு பாய்ந்தபடி இருந்தது. முப்பது இலட்சம் மக்களுக்கு மேல் அன்று திரண்டு குழுமியிருந்தனர்—அண்ணா அவர்களின் அன்பு உருவத்தை இறுதி முறையாகக் காண—கண்டு கண்ணீர் வடிக்க.

எத்தனையோ தலைவர்கள், எத்தனையோ கலைஞர்கள், எத்தனையோ புலவர்கள், எத்தனையோ அறிஞர்கள் தமிழகத்தில் இதற்கு முன்னர் இறந்தது உண்டு. ஆனால் அவர்களில் எவர் மரணத்தின் போதும், இத்தனை இலட்சக்கணக்கான மக்கள், கடல் போல் திரண்டதுமில்லை: வெள்ளம் போல் கண்ணீர் வடித்ததுமில்லை.

தமிழகத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் இதற்கு முன்னர் எப்போதும் ஏற்பட்டிராத ஒரு காட்சி இது. இந்திய நாடு முழுமையையும் மனதில் நிறுத்திப் பார்த்தால், உலக உத்தமர் காந்தியடிகள், ஜனநாயகக் காவலர் பண்டித நேரு ஆகிய இருவரின் மரணத்தின் போதுமட்டுமே இத்தகைய மக்கள் வெள்ளத்தைக் காண முடிந்தது.

அண்ணா அவர்களுடைய அன்பு உள்ளத்தில் தமிழ் மக்கள் எப்படி நீக்கமற நிறைந்திருந்தார்கள் என்னும் உண்மையையும், அத் தமிழ் மக்களின் கோடிக்கணக்கான உள்ளங்களில் அண்ணா அவர்கள் எப்படி ஒப்பற்ற இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்னும் உண்மையையும் விளக்கிக் காட்ட இம் மக்கள் வெள்ளத்தைவிட வேறென்ன சான்று தேவை ?

அண்ணா அவர்கள், "வரலாற்றில் அபூர்வமாகக் காணப்படுகிற அற்புத மனிதர்களில் ஒருவர்" என்று "கல்கி" இதழ் அதன் தலையங்கம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மை. இணையற்ற அற்புதங்கள் ஏராளமாகக் காணப்படுகிற ஒப்பற்ற ஒரு வாழ்க்கை, அண்ணா அவர்களுடைய வாழ்க்கை.

சொல்லின் செல்வர்களாக—ஒப்பற்ற பேச்சாளர்களாக ஒளி வீசித்திகழ்கிற பலர், எழுத்தாற்றல் பெற்றவர்களாக இருப்பதில்லை. அதுபோலவே ஆயிரமாயிரம் வாசகர்களைக் கவர்ந்து இழுக்கவல்ல எழுத்தாற்றல் படைத்த பேனா மன்னர்கள், பெரும்பாலும் பேச்சுத் திறன் அற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் அண்ணா அவர்களிடத்திலோ, ஒப்பற்ற பேச்சாற்றல்—இணையற்ற எழுத்துத் திறன்—இரண்டும் ஒன்றுக்கு ஒன்று சளைக்காத அளவில் இணைந்து சிறந்து உயர்ந்து பொலிந்தன.

இந்த இருவகை ஆற்றல்களையும் செந்தமிழில் பெற்றுச் சிறந்தவர்கள், ஆங்கில மொழியிலும் அதே அளவில் அத் திறன்களைப் பெற இயல்வதில்லை. அதுபோலவே ஆங்கில மொழியில் செந்நாப் புலவர்களாகவும், எழுத்து வேந்தர்களாகவும் திகழ்பவர்கள் தமிழ் மொழியிலும் அத்திறன்களைப் பெற்று விளங்குவதில்லை. ஆனால் அண்ணா அவர்களிடத்திலோ இந்த இருவகைத் திறமைகளும் இரு மொழிகளிலும் சிறந்து விளங்கின ; நிறைந்து பொலிந்தன

பத்திரிகைகளின் ஆசிரியர்களாக இருந்து சிந்தனையைக் கிளறிவிடும் சீரிய கட்டுரைகளை இயற்றுபவர்கள், பெரும்பாலும் சிறு கதைகளையும் நாடகங்களையும் பெருங் கதைகளையும் இயற்றும் கலைஞர்களாகப் பரிணமிக்க முடிவதில்லை. அதுபோலவே கதைகளையும் நாடகங்களையும் நவீனங்களையும் அற்புதமாகப் படைக்கவல்ல பேராற்றல் படைத்தவர்கள். சிறந்த கட்டுரைச் செல்வர்களாகவும் பத்திரிகை ஆசிரியர்களாகவும் இருப்பதில்லை. ஆனால் பேரறிவுப் பெட்டகமாகவும் புத்துலகச் சிற்பியாகவும் திகழ்ந்த அண்ணா அவர்களோ, இந்த இருவகைப் புலமைகளையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தார்.

எழில் கொஞ்சும் நாடகங்களை உருவாக்கித் தருகிற ஆசிரியர்களால் சிறப்பார்ந்த முறையில் நடிக்க முடிவதில்லை. உயர்ந்த முறையில் நடிக்கும் உன்னதத் திறமை பெற்றுள்ள நடிகர்களால் சீரிய நடையில் அமைந்த சிறந்த நாடகங்களை இயற்ற முடிவதில்லை. ஆனால் தென்னகத்தின் பொன்னொளியாய்த் தன்னிகரற்ற புகழுடன் வாழ்ந்த அண்ணா அவர்களோ, மிகச் சிறந்த நாடகாசிரியராகவும் விளங்கினார்கள்; மிக உயர்ந்த நடிகர் திலகமாகவும் காட்சி அளித்தார்கள்.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சான்றாண்மை படைத்தவர்கள் அரசியல் தலைவர்களாக விளங்குவதில்லை என்றும், அரசியல் தலைவர்களாக இருப்பவர்களிடத்தில் பெரும்பாலும் இத்தகைய உயர்ந்த பண்பு இருப்பதில்லை என்றும் உலக வரலாறு அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறது. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்களோ, தன்னை ஓயாமல் திட்டித் தீர்த்தவர்களையும் தளராமல் பாராட்டி மகிழும் பெருந்தகைமையும், தனக்குத் தீமை செய்வதையே தங்கள் பிறவிப் பயனாக எண்ணித் திரிந்தவர்கட்கும் நன்மையையே செய்து உயர்ந்த சீரிய இயல்பும் பொருந்தியவராக இருந்தார்.

அதிகார நாற்காலி, எவ்வளவு உயர்ந்த பண்பினரையும் வழி தவறி நடக்கவைக்கும் இயல்புடையது என்பர் உலக இயல்பை உணர்ந்தவர்கள். பதவிப் பீடத்தில் அமர்வதற்கு முன்னர், பொறுமையும் அடக்கமும் எளிமையும் ஒன்று திரண்டு உருவெடுத்தவர்கள்போல் உயர்ந்த காட்சி அளித்த எத்தனையோ தலைவர்கள், அதிகார நாற்காலியில் அமர்ந்த பின்னர், ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் படாடோபமும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்னும் போக்கும் உடையவர்களாகி, கிறுக்

கும் செருக்கும் படைத்தவர்களாக மாறி விடுகின்றனர். இந்த உண்மையை எத்தனையோ நாடுகளின் வரலாற்றுச் சுவடிகளில் எத்தனையோ முறை நாம் காண்கிறோம். ஆனால் அண்ணா அவர்களுடைய அற்புதமான வாழ்க்கை, இந்தத் துறையிலும் ஓர் ஒப்பற்ற அதிசயமாகவே காட்சியளிக்கிறது. பதவி நாற்காலியில் அமர்வதற்கு முன்னரே, மிகச் சிறந்த திறமைகளின் இருப்பிடமாகத் திகழ்ந்த போதிலும் மிக உயர்ந்த அடக்கத்தின் திரு உருவாகக் காட்சியளித்த அண்ணன் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னரோ, முன்னிலும் பல மடங்கு அடக்கமும் பொறுமையும் மிகுந்தவர்களாக உயர்ந்து விட்டார்கள். வேறு எவரிடமும் காணப்படாத எண்ணற்ற ஆற்றல்கள் படைத்த இப் பெருமகனிடம் இவ்வளவு அடக்க உணர்வா—இவ்வளவு பொறுமை இயல்பா—இவ்வளவு பெருந்தன்மைக் குணமா—என்று எண்ணி எண்ணி, சொல்லிச் சொல்லி வியந்தது இந்தியத் துணைக் கண்டம்.

பண பலமோ பத்திரிகைபலமோ அற்ற ஒருவர், புதிதாக ஓர் அரசியல் கட்சியை உருவாக்கி, தன் பேச்சுத் திறனாலும் எழுத்துவன்மையாலும் சிந்தனை ஆற்றலாலும் அதனைக் கட்டி வளர்த்து, பதினெட்டே ஆண்டுகளில் அதனை ஆட்சிப் பீடத்தில் அமர்த்துவது என்பது அற்புதமான ஒரு சாதனை ; இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலேயே இதுவரை இல்லாத ஒரு சாதனை. இத்தகைய இணையற்ற சாதனையை நிகழ்த்திக் காட்டியவர் அண்ணா அவர்கள்.

காங்கிரசல்லாத ஒரு கட்சி, பிற கட்சிகளோடு கூட்டுச் சேராமல், தனி ஒரு கட்சியாகவே நின்று அமைச்சரவையை அமைத்து, இரண்டு ஆண்டுகளாக நிலையான ஓர் ஆட்சியை நடத்துகிறது என்பது, இந்தியா முழுவதிலும் தமிழகம் ஒன்றில் மட்டுமே காணப்படுகிற அரசியல் அற்புதம். இந்த அற்புதம், அண்ணனின் கைவண்ணத்தில் விளைந்த கருவூலம்.

மதராஸ் மாநிலம் என்னும் பொருத்தமற்ற பெயரைத் தாங்கித் தவித்த தமிழகத்திற்குத் "தமிழ்நாடு" என்னும் தேனினும் இனிய தீஞ்சுவைப் பெயரை அதிகாரபூர்வமாகச் சூட்டி மகிழ்ந்த அண்ணா அவர்கள், மத்திய அரசிலும் மாநில அரசிலும் வெவ்வேறு கட்சிகள்

அதிகாரம் செலுத்திய போதிலும் ஒன்றுடன் ஒன்று போரும் பூசலும் இன்றி இணைந்து வாழ முடியும் என்பதை வாழ்ந்து காட்டிய அண்ணா அவர்கள், கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்னும் மும்மணிக் கோவையைத் தன் தாரக மந்திரமாகத் தரணிக்குத் தந்துள்ள அண்ணா அவர்கள், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்னும் மொழியையும் கருத்தையும் அடிக்கடி எடுத்துக் கூறி மாற்றுக் கருத்துக்களையும் மாற்றுக் காட்சியினரையும் மதித்துப் போற்றவேண்டும் என்னும் ஜனநாயகப் பண்பாட்டைப் பேணி வளர்த்த அண்ணா அவர்கள், மிகஎளிய நடுத்தரக் குடும்பம் ஒன்றில் தோன்றிய போதிலும் தன் அறிவாலும் ஆற்றலாலும் பண்பாலும் அன்பாலும் உயர்ந்து உயர்ந்து மக்களின் இதயங்கள் தோறும் இடம் பெற்றுவிட்ட இலட்சியத் தலைவராம் அண்ணா அவர்கள், இனி இல்லை.

நினைக்கும் போதே நெஞ்சைப் பிளக்கும் உண்மை இது.

அண்ணன் மறைந்துவிட்டார். அந்த அன்பு உருவம் மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்டது. அந்த ஒப்பற்ற இதயத்தின் அசைவு நின்று விட்டது. அந்த இணையற்ற வீணையின் இன்னிசை மறைந்து விட்டது. தமிழ் மக்கள், ஆற்றுவாரும் தேற்றுவாரும் அற்ற அனாதைக் குழந்தைகள்போல் ஆகிவிட்டனர்.

தமிழகம் முழுவதுமே தேம்பி அழும்போது, யார் யாருக்கு ஆறுதல் கூறமுடியும் ?

அனைவர் இதயங்களிலும் ஏற்பட்டுவிட்டு மாளாத துயரத்தை—தீராத வேதனையை—ஓயாத கண்ணீரை, மெல்ல நகர்ந்து செல்லும் காலத்தால்தான், மெல்லமெல்ல, சிறிது சிறிதாகக் குறைக்க முடியும்.

வாழ்க அண்ணனின் நற்பெயர் ! வளர்க அவர் திருப்புகழ் !!

அறிஞர் அண்ணா — இரங்கற்பா

ந. மகாலிங்கம், பி.ஏ.,
ஆசிரியர் :
(சண்முக முத்தையர் உயர் துவக்கப் பள்ளி, பண்ணுருட்டி)

3—2—1969

※

தேசமே போற்றத் திகழ்ந்த தலைவரே!
பாசமே கண்ணீரைப் பாய விடாதே!
தொழுத வறியோர்க்குத் தொல்லைகள் இல்லை!
அழுத அறியார்க்கோ எல்லையும் இல்லையே!
சோகத்தைப் போக்கிய சொல்வீரர் இப்போது
சோகத்தைத் தந்துவிட்டு சோர்ந்து மறைந்தார்!
அறிவில் இலர்எவரும் அண்ணாபோல்! பண்புச்
செறிவில் சிலரே இச் சீர்மல்கும் நாட்டில்!
மலர்சாய்ந்தால் பூக்கும்; மண்ணில் அண்ணாபோல்
சிலர்சாய்ந்தால் தோன்றுவரோ செந்தமிழ் நாட்டிலே!
ஆண்டவன் ஆக்கும் அரிய பிறவி அவர்!
மீண்டுமவர் போல்ஒரு மென்னெஞ்சங் கொண்டார்
தோன்றுவரோ இப்போது தொல்லுல கந்தனில்!
சான்றோர் புகழச் சகத்தில் மறைந்தார்!
மறையவில்லை அண்ணா! மறையவில்லை அண்ணா!
நிறைந்துள்ளார் நெஞ்சில்! நிறைந்துள்ளார் நெஞ்சில்!
எளியோர் மனத்தினில் என்றுமே வாழ்ந்த
களிப்புதந்தார்! இன்றுந்தான் காட்சி தருகின்றார்!
பீடே குறையாத பேரறிஞர் வீழ்ந்ததால்
நாடேநீ சோகமே நாடு;

கருணாநிதி வாழ்க்கை வரலாறு

திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் "கலைஞர்" என்று அருமையாக அழைக்கப்படும் திரு. முத்துவேல் கருணாநிதி தஞ்சை ஜில்லா திருக்குவளை கிராமத்தில் 1924 ஜூன் 3-ம் தேதி பிறந்தார்.

மாணவப் பருவத்திலேயே அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்ட கருணாநிதி, திராவிட இயக்கத்தின் மாணவர் பிரிவை,'தமிழ் மாணவர் மன்றம்' என்ற பேரில் முதல் முதலாகத் தொடங்கி வைத்தார்.

திரு. அண்ணாதுரையைப் போலவே இவரும் அரசியல் வாழ்வின் ஆரம்ப காலத்தில் திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்.

திராவிடக் கழகத்தின் பத்திரிகையான "குடியரசு" பத்திரிகையின் பொறுப்பாசிரியராக இருந்திருக்கிறார். அப்போது திரு. ராமசாமி நாயகருடன் இவர் தமிழகம் பூராவும் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார்.

அண்ணாதுரையைப் போலவே சிறந்த பேச்சாளர் ; எழுத்தாளர் ; பத்திரிகைத்துறை அனுபவம் பெற்றவர் ; நாடகாசிரியர் ; திரைப்பட கதாசிரியர். அது மட்டுமல்ல : தமது தலைவரைப் போலவே இவரும் கொள்கைப் பிரசாரத்துக்காக தாம் எழுதிய நாடகங்களில் தாமே நடித்தும் இருக்கிறார். கட்சிக்கு நிதி திரட்டுவதற்காகவும், கொள்கைகளைப் பரப்புவதற்காகவும் இவர் எழுதியுள்ள நாடகங்கள் பல.

வசன கர்த்தா

35 படங்களுக்கு மேல் இவர் கதை வசனம் எழுதியுள்ளார். அவற்றுள் கருத்துச் செறிவுள்ள உரையாடல்கள், கொள்கைப்பற்று வாய்ந்த கதை ஆகிய அம்சங்களுக்காக பிரபலமடைந்த படங்கள் பல. சொல்லப் போனால் அவை மக்களின் சிந்தனைப் போக்கையே மாற்றி யமைக்கக்கூடியவையாக விளங்கின.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தை 'பூம்புகார்' என்ற பெயரில் திரைப் படமாக அவர் வழங்கியிருக்கிறார். இலக்கிய நயம் நிறைந்த அந்தப் படம் ஜனரஞ்சகமாகவும் விளங்கியது. கருணாநிதியின் வசனம் என்றாலே சினிமா ரசிகர்களிடை அதற்கு ஒரு தனி மவுசு இருந்தது.

அவர் எழுதிய 'தூக்குமேடை' 'உதய சூரியன்' என்ற இரு நாடகங்களுக்கு அப்போதிருந்த அரசாங்கம் தடை விதித்தது.

கருணாநிதியின் இலக்கிய ஈடுபாடு நாடகம், சினிமாவுடன் மட்டும் நின்றுவிடவில்லை. சிறு கதை, கவிதை முதலிய துறைகளிலும் அது பிரகாசித்தது. மந்திரியான பிறகுங்கூட அவர் பல கவியரங்கங்களில் பங்கு கொண்டிருப்பதே அவரது கவிதையார்வத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

தி. மு க. கொள்கைகளையும் செய்திகளையும் வெளியிடுவதற்காக அவர் "முரசொலி" பத்திரிகையை ஆரம்பித்தார்.

தி. மு. க. தோற்றுவாய்

1949-ல் அண்ணாதுரையுடன் சேர்ந்து திராவிடக்கழகத்திலிருந்து பிரிந்து வந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஸ்தாபித்தவர்களில் கருணாநிதியும் ஒருவர். 1961-ல் தி. மு. க. வின் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்து இன்று வரை அந்தப் பொறுப்பை வகித்து வருகிறார். கட்சிக்கு நிதி வசூலிப்பதில் அவரது திறமை குறிப்பிடத்தக்கது. சென்ற பொதுத் தேர்தலின் போது அவர் பல சிறப்புக் கூட்டங்களையும், நாடகங்களையும் நடத்தி 11 லட்சம் ரூபாய் திரட்டிக் கொடுத்தார்.

விருகம்பாக்கம் மகாநாட்டில் தி. மு. க. வேட்பாளர்கள் பெயர்களை திரு. அண்ணாதுரை அறிவித்த போது திரு. கருணாநிதியை திருவாளர் பதினொரு லட்சம் என்று குறிப்பிட்டார்.

வெவ்வேறு தொகுதிகளில் மும்முறை வெற்றி

ஒவ்வொரு தேர்தலிலும் ஒரு புதிய தொகுதியில் நின்று வெற்றி பெற்ற பெருமை திரு. கருணாநிதியைச் சாரும். 1957-ம் வருஷத் தேர்தலில் குளித்தலையிலும், 1962ல் தஞ்சாவூரிலும், 1967-ல் சைதாப்பேட்டையிலும் நின்று வெற்றி பெற்றார். சென்ற அசம்பிளியில் தி. மு. க. கட்சி உபதலைவராக இருந்தார்.

மோதிரப் பரிசு

1959-ம் ஆண்டில் சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் தி.மு.க. முதன் முதலாகப் போட்டியிட்டு கைப்பற்றியபோது தேர்தல் வேலைகளைக் கவனித்து வந்தவர் திரு. கருணாநிதி தான். அப்போது மெரினா கடற்கரையில் நடைபெற்ற வெற்றி விழாவில் திரு. அண்ணாதுரை கருணாநிதிக்கு ஒரு மோதிரம் பரிசளித்தார்.

ஆறு தடவை சிறைவாசம்

தி. மு. க. நடத்திய எல்லாக் கிளர்ச்சிகளிலும் பங்கு கொண்டு திரு கருணாநிதி ஆறு முறை சிறை புகுந்திருக்கிறார்.

1965-ல் இந்தி எதிர்ப்புக்கிளர்ச்சியின் போது பாதுகாப்பு விதிகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை சிறையில் 60 தினங்கள் தனிக்காவலில் இருந்தார். முரசொலியில் அவர் எழுதியிருந்த ஒரு கட்டுரைக்காக அந்தப் பத்திரிகையின் மீதும் வழக்கு தொடரப்பட்டது.

சென்ற தேர்தலின் போது, தேர்தலுக்கு முந்திய தின இரவு அவரைக் கொல்ல முயற்சி நடந்தது. அவர் மயிரிழையில் உயிர் தப்பினார். இதுசம்பந்தமாகப் பதிவு செய்து கொள்ளப்பட்ட எல்லா வழக்குகளும், தி.மு க.வந்த பிறகு வாபஸ் பெறப்பட்டன.

அரசாங்க பஸ் போக்கு வரத்துத் துறை விரிவு கண்டிருப்பதற்கு கருணாநிதியே பெருமளவுக்குக் காரண புருஷராவார். அவ்வப்போது ஏற்படும் பிரச்னைகளைப் பற்றி உடனுக்குடனே முடிவுஎடுப்பதில் பெயர் போனவர் அவர்.

—"தினமணி"

புதிய அமைச்சரவை:

இலாகாக்கள் விவரம்

*

முதல் மந்திரி
திரு. மு. கருணாநிதி

பொதுவிவகாரங்கள், பொது நிர்வாகம்; ஐ. சி. எஸ். சம்பந்தப் பட்ட விவகாரங்கள்; ஐ. ஏ. எஸ். பற்றிய விவகாரங்கள்; அதிகாரிகள், ஜில்லா ரெவின்யூ அதிகாரிகள், டிபுடி கலெக்டர்கள்; போலீஸ்; தேர்தல்கள்; மது விலக்கு; சட்டசபை; தகவலளிப்பு, விளம்பரம், சினிமா.

திரு. கே. ஏ. மதியழகன்

(நிதி மந்திரி) : நிதி; திட்டமிடுதல்; ரெவின்யு; ரெவின்யு போர்டு; ஜில்லா ரெவின்யு நிறுவனங்கள்; வர்த்தக வரிகள்; கடல் கடந்த இந்தியர் விவகாரங்கள்; அகதிகள் நலம்.

திரு. ஏ. கோவிந்தசாமி

(உணவு. விவசாய மந்திரி) : உணவு; உணவு உற்பத்தி; கால்நடை நலம்; மீன் வளம்; சிங்கோனு.

திருமதி சத்தியவாணிமுத்து

(சுகாதார மந்திரி) : பொதுச் சுகாதாரம்; மருந்துகள், ஹரிஜன நலம்; பெண்கள், குழந்தைகள் நலம்; அச்சு எழுது கோல் வகையறு; அரசு அச்சகம்; நாட்டுலர்; அனாதை இல்லங்கள்; பிச்சைக்கார விடுதிகள்; இளங் குற்றவாளிகள்; உஷார் சேவைகள்.

திரு. எஸ். மாதவன்

(தொழில், கல்வி மந்திரி) : கைத் தொழில்கள்; பஞ்சாலைகள்; நூல், கைத்தறி; சுரங்கங்கள்; தாதுப் பொருள்கள்; உருக்கு, இரும்பு; கட்டுப்பாடுகள்; வேலை வாய்ப்பு, பயிற்சி; கம்பெனிகள் விவகாரம்; தொழில் கல்வி உள்ளிட்ட கல்வி; ஆட்சி மொழி; சட்டம்; நீதி மன்றங்கள்.

திரு. சாதிக் பாட்சா

(பொதுப்பணி மந்திரி): பொதுப் பணிகள்; சிறுபாசனங்கள், விசேஷ சிறு பாசன திட்டப்பணிகள்; நெடுஞ்சாலைகள்;

திரு. எம். முத்துசாமி

(ஸ்தல ஸ்தாபன மந்திரி; முனிசிபல் நிர்வாகம்; சமுதாய வளர் திட்டம்; பஞ்சாயத்துக்கள்; பூதானம்; கிராம தானம்; கதர், கிராமக்கைத் தொழில்கள்; கிராமத் தொழில்கள்; முன்னாள் ராணுவ வீரர்கள் நலம்; சிரணிப் படைகள்.

திரு. பி. யு. சண்முகம்

(தொழிலாளர் நல மந்திரி): தொழிலாளர் நலம்; பதிவுத்துறை,

பாஸ்போர்ட்டுகள் ; துறை முகங்கள் ; சிறைகள் ; எடைகள் ; அளவைகள் ; பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு; சரக்குகள், விலைகள்; வினியோகச் சட்ட நிர்வாகம்.

திரு. எஸ் பி. ஆதித்தன்

(கூட்டுறவு மந்திரி) : கூட்டுறவு ; போக்கு வரத்து ; அரசு பஸ்கள் ; மோட்டார் வரிகள் சட்டம்.

திரு. கே. வி. சுப்பையா

(அறநிலையப் பாதுகாப்பு மந்திரி) அறநிலையங்கள் பாதுகாப்பு; வீட்டு வசதி, ஜாகை வசதிக் கட்டுப்பாடு.

திரு. ஓ. பி. ராமன்

(மின்விசை மந்திரி) : மின் விசை ; லேவா தேவிச் சட்டங்கள் (கிராமக் கடன் உள்பட) ; சிட்டு பண்டுகள் சட்ட நிர்வாகம்.

புது மந்திரிகள் விவரம்

திரு. எஸ். பி. ஆதித்தன் : ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1905-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 1-ந் தேதியில் பிறந்தார். ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளியிலும் திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியிலும் பயின்று, லண்டனில் பாரிஸ்டர் பரீட்சை தேறினார். 1947-57-ல் மேல் சபை மெம்பர். 1957-62-ல் அசெம்பிளி மெம்பர். 1964-67-ல் மீண்டும் மேல் சபை மெம்பர். 1967 மார்ச்சில் சபா நாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1968 ஆகஸ்டில் பதவியை ராஜிநாமாச் செய்தார்.

திரு. ஓ. பி. ராமன் : மதுரை மாவட்டம் மேலூர் தொகுதியிலிருந்து அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 22-7-1936-ல் பிறந்தார். திண்டுக்கல் செயின்ட் மேரி உயர்நிலைப் பள்ளி, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் பயின்றார். பின்பு சட்டக் கல்லூரியில் படித்தார். கலியாணமாகாதவர். பள்ளிக்கூட நாட்களிலேயே கழகத்தில் அக்கறை காட்டியவர். கல்லூரி மாணவர் முன்னேற்றக் கழக மெம்பர். வக்கீல் தொழில், கூடைப் பந்தாட்டப் பிரியர். முன்னாள் போலீஸ் மந்திரி திரு. கக்கனைத் தோற்கடித்து அசெம்பிளிக்கு வந்தார்.

திரு. கே. வி. சுப்பையா : பி. ஏ. பட்டம் பெற்றவர். ஆலங்குடி தொகுதியின் பிரதிநிதி. அசெம்

பணிக்கு வந்தார். 1920-ம் வருஷம் மே மாதம் 11-ந் தேதியில் பிறந்தார். ஆலங்குடியிலும், பின்பு புதுக்கோட்டை பிருஹதாம்பாள் உயர்நிலைப் பள்ளியிலும், மகாராஜா கல்லூரியிலும் படித்தார். திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரியில் படித்துத் தேறியவர். திருமணமானவர். திருச்சி கழகப் பொருளாளர். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் 45 நாள் சிறைவாசம் செய்தார். புதுக்கோட்டையில் கூட்டுறவுத் துறையில் ஈடுபாடு உடையவர். புட்பால், ஹாக்கி, பாட்மிண்டன் ஆட்டங்கள் இவரது பொழுது போக்காகும்.

பி. யு. ஷண்முகம் : ஆற்காடு ஆசிரியர் தொகுதியிலிருந்து மேல் சபைக்கு வந்தவர். திருவண்ணாமலை சேர்மன் பதவி வகித்தவர். அப்பதவி வகித்தவரில் இளையவர் இவர். இரு தடவை அசெம்பிளி மெம்பர் பல தடவை கழகப் போராட்டங்களில் சிறை சென்றவர்.

இன்னொருவர் வீட்டில் அவர்கள் தருவதைச் சாப்பிடு, உன்னுடைய வீட்டில் இருப்பதைச் சாப்பிடு.

—செக்கோஸ்லோவேகியா

சூரியன் நுழையாத இடத்தில் வைத்தியன் நுழைகிறான்.

—துருக்கி

நம்பிக்கைக்குரிய மூன்று நண்பர்கள் : வயோதிக மனைவி, வயோதிக நாய், கையிலிருக்கும் பணம்.

—அமெரிக்கா

பெண்ணின் மிகச் சிறந்த சீதனம் அவள் அழகு.

—ஜெர்மனி

குருட்டுப் பூனை செத்த எலியைத்தான் பிடிக்கும்.

—சீனா

இரண்டு மொழிகள் தெரிந்த ஒரு மனிதன் இரண்டு மனிதர்களுக்குச் சமம்.

—பிரான்ஸ்

உன்னை அளவின்றிப் புகழ்கின்றவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றி விட்டான் - அல்லது ஏமாற்றப் போகிறான்.

—ஹங்கேரி

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்"

ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், மன்னார்குடி

(தஞ்சாவூர் மாவட்டம்.)

விண்ணப்பம்

தமிழக அரசின் மாண்புமிகு முதல் அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கட்கு, மன்னை ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க சார்பில் படைப்பிக்கும் விண்ணப்பம்.

அன்பும் பண்பும் நிறைந்த ஐயா ! வணக்கம் பல.

மக்கள் நன்மைக்குப் பணியாற்ற உறுதிகொண்ட ஜனப் பிரதிநிதியாகிய உங்கள் முன்னர் பின் கண்ட கோரிக்கைகளை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கோரிக்கைகள்

1. 1—4—1955-க்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வுகால ஊதியம் கொடுக்க ஆணை பிறப்பித்த தமிழக அரசிற்கு மனமார்ந்த நன்றி செலுத்துவதுடன், இப்பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்கள், சுமார் எழுபது, எழுபத்தைந்து வயதிற்கு மேற்பட்டவராகவும், நடமாடும் சக்தியற்றவராகவும், நோயினாலும் வறுமையினாலும் அல்லலுறுபவர்களாகவும் இருப்பதால், இவர்களுக்குக் காலதாமதமின்றி மிக விரைவில் பென்ஷன் கிடைக்க பள்ளி நிர்வாகிகளும், கல்வி அதிகாரிகளும் விரைவில் பென்ஷன் கணக்கு விபரங்களை முடித்து மேலதிகாரிகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு உதவவேண்டுமென தமிழக அரசை மிகப் பணிவுடன் வேண்டுகிறோம்.

2. ஆசிரியர்களுக்கு பென்ஷன் வழங்குவதில் காலதாமதத்தை தவிர்த்து, விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், சேமிப்புத் தொகை ஓய்வு பெற்ற ஒரு மாதத்திற்குள்ளும், பென்ஷன் தொகை மூன்று மாதங்களுக்குள்ளும் கிடைக்க வழி முறைகள் வகுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறோம்.

3. மைசூர் மாநிலத்தில் குறைந்தபட்ச பென்ஷன் தொகை 30 ரூபாயாகவும், கேரள மாநிலத்தில் 35 ரூபாயாகவும் 1—4—68 முதல்

வழங்கப்படுகிறது. ஏழை ஆசிரியர்களிடம் அனுதாபமுள்ள தமிழக அரசும் குறைந்தபட்ச பென்ஷனை 20 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக உயர்த்தி 1—4—1968 முதல் வழங்கவேண்டுமெனப் பணிவுடன் கோருகிறோம்.

4. விலைவாசி உயர்வால் அல்லலுறும் ஊழியர்களுக்கு குறைந்த பட்ச பஞ்சப்படியே ரூ. 71 ஆக 1—1—1969 முதல் வழங்க, தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இவ்வுதவிக்கு அரசுக்கு நன்றி தெரிவிப்ப தோடு, ஆசிரிய பென்ஷனர்களுக்கும் கணிசமான பஞ்சப்படி அளிக்க வேண்டுகிறோம்.

அனைத்து பென்ஷனர்களுக்கும் பென்ஷன் தொகையை 10 சத வீதமாவது உயர்த்த வேண்டுகிறோம்.

5. ஒய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ உதவியும், பிள்ளைகளுக்கு இலவசக் கல்லூரிக் கல்வியும் அளிக்க வகை செய்யவேண்டுமென்று கோருகிறோம்.

கல்வி வளர்ச்சியிலும், ஏழை ஆசிரிய சமுதாய முன்னேற்றத்திலும் மிகவும் அனுதாபமுள்ள தாங்கள், வயது முதிர்ந்த ஆசிரியத் தியாகிகளின் நியாயமான கோரிக்கைகளை ஒப்புக்கொண்டு, விரைவில் இவை பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். வணக்கம்.

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

முதுமை கல்வித் தொண்டன்,

என். எஸ். வெங்கடேசுவரன்,

அமைப்புத் தலைவர்,

ஒய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், மன்னார்குடி.

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.'' —(குறள்)

என். எஸ். வெங்கடேசுவரன் 10–2–'69

உலகத்துப் பழமொழிகள்

அறியும் சக்தியைப் போன்றதொரு கண் இல்லை. அறியாமையைப் போன்றதொரு குருடு இல்லை. நோயைப் போன்றதொரு பகைவன் இல்லை. மரணத்தைப் போன்றதொரு பயம் இல்லை.

—சீனு

காதைப் பிடித்து இழுத்தால் தலை தன்னாலே வரும்.

—இந்தியா

ஒரு முட்டாள் கடலுக்குள் ஒரு கல்லை வீசினால் நாற்பது அறிஞர்களாலும் அதை வெளியில் எடுக்க முடியாது.

—துருக்கி

உருவம் சிறியதென்று எண்ணாதே; ஊசி உருக்கினால் செய்யப்பட்டது!

—எகிப்து

செத்த சிங்கத்தை கழுதை கூட உதைக்கும்.

—ஹங்கேரி

உழைக்கிறவனை ஒரு பிசாசு ஆசை காட்டுகிறது. சோம்பேறியை ஆயிரம் பிசாசுகள் ஆசை காட்டுகின்றன.

—இத்தாலி

ஊதாரி வருங்காலப் பிச்சைக்காரன்; கஞ்சன் என்றுமே பிச்சைக்காரன்.

—போலந்து

கோபம்-பழிவாங்கும் உணர்ச்சியை மணந்தால் கொடுமைக் குழந்தைதான் பிறக்கும்.

—ரஷ்யா

உன்னுடைய கவலையை முழங்கால்களுக்குமேல் போகவிடாதே!

—ஸ்வீடன்

இரண்டு பேர்கள் என்றுமே திருப்தியடைவதில்லை - அறிவைத் தேடுகிறவனும், செல்வத்தைத் தேடுகிறவனும்.

—அரேபியா

கரி, சாம்பலைப் பார்த்துச் சிரிக்கின்றது.

—ஆப்பிரிக்கா

அதிகம் கொக்கரிக்கும் கோழி சின்ன முட்டைகளைத்தான் இடும்.

—பல்கேரியா

—“ முத்தாரம் ”

கல்வியில் பெற்றோர்களின் பொறுப்பு...

— இராகவன் தம்பி —

✲

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்பது பொய்யா மொழி வள்ளுவம். தம் பிள்ளைகளைக் கல்வி கேள்விகளில் வல்லவர்களாக வளர்த்து அவையில் முந்தியிருக்கச் செய்தலே பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமை என வள்ளுவர் வகுத்துரைத்துள்ளார். ஆனால், தற்காலத்தில் பெரும்பான்மையான பெற்றோர்கள்; தம்மின் தம்மக்கள் அறிவுடையவராக, ஆன்றவிந்தடங்கிய சான்றோராக, கல்வி கேள்வியைக் கசடறக் கற்று அவையத்து முந்தியிருப்பச் செய்வதற்காகப் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பதைவிட பிள்ளைகள் வீட்டில் தரும் தொல்லைகளிலிருந்து சற்று விடுபட்டிருக்கலாம் என பிள்ளைகளின் தொல்லை குறையவே பள்ளிகளில் சேர்ப்பிக்கின்றார்கள்.

அதுமட்டுமன்று, பிள்ளைகளைப் பள்ளியில் சேர்ப்பதோடு தங்களுடைய பொறுப்பு முடிந்து விட்டதாகக் கருதுகின்றார்கள். மிகச் சில பெற்றோர்களே, படிப்பது, எழுதுவது, கற்பது என்பதைத் தவிர வேறு எவைகளையெல்லாம் தங்கள் குழந்தைகள் பள்ளியில் அறிந்து கொள்ளுகின்றார்கள் என அறிய அக்கறை எடுத்துக் கொள்ளுகின்றார்கள். இன்னும் மிகச்சிலரே, பள்ளிகளுக்குச் சென்று ஆசிரியர்களோடுதொடர்பு கொண்டு தங்கள் செல்வங்களின் படிப்பு, அறிவு ஆற்றல், நடத்தை, மற்ற பிள்ளைகளோடும் ஆசிரியர்களோடும் பழகுந்தன்மை இவைகளைப் பற்றி அறிந்து கொள்ளுகின்றார்கள். ஆனால், மிகப்பெரும்பாலான பிள்ளைகள் பெற்றோர்களால் அலட்சியப் படுத்தப்பட்டவர்களாகவே இருக்கின்றார்கள்.

பொதுவாக, நம்முடைய பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியின் முன்னேற்றத்தைப் பற்றிக் கவலைப் படுவதும், அதற்காக ஆசிரியர்களோடும் பள்ளி நிர்வாகிகளோடும் தொடர்பு கொள்ளுவதும் ஆண்டு தேர்வுக் காலத்திலும், தேர்வின் முடிவு வெளியிடப்படும் காலங்களிலும் தான். ஆண்டின் மற்றப் பொழுதுகளிலோ அவர்கள் தங்களுடைய அலுவல்களில் மிக்க "பிசி" யானவர்களாகவும் பெற்றோர் என்ற கடமைப் பொறுப்போடு ஆசிரியர்களுடன் அடிக்கடி ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தொடர்புகளை உதாசீனம் படுத்தியவர்களாகவுமே இருக்கின்றார்கள். எழுத்தறிவிக்கும் இறைவன், தேர்வும் தேர்வின் முடிவும் என்ற கஷ்டம் தோன்று

கின்ற காலத்தில் தான் பெற்ேறார்களின் கண்களுக்குத்தெரிகின்றான்.

ஒருநாளின் இருபத்து நான்கு மணி நேரத்தில் ஆறே ஆறு மணி நேரந்தான் பிள்ளைகள் ஆசிரியர்களின் பொறுப்பிலும் பார்வையிலுமிருக்கின்றார்கள். மற்றப் பதினெட்டு மணி காலமும் அப்பிள்ளைகள் பெற்றோர்களின் கவனத்தில் தான் இருக்கின்றார்கள் என்பதை எந்தப் பெற்றோராவது சிந்தித்துப் பார்க்கின்றார்களா ? எனவே, ஒரு நாளின் பெரும் பொழுது பெற்றோர் வசமிருக்கும் குழந்தைகளின் படிப்பிலும். ஒழுக்கத்திலும், எதிர்காலத்துக்கென வழிவகுப்பதிலும் ஆசிரியர்களைவிட தங்களுக்கே அதிகப் பொறுப்புண்டு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர வேண்டும். பள்ளியில் சேர்த்தாகி விட்டது... ஆசிரியர் பொறுப்பில் விட்டாகிவிட்டது......விட்டது கவலை; என்றிருப்பது...விரும்பத் தக்க செயலல்ல

நன்கு பணியாற்றக் கூடிய ஒரு திறமையான ஆசிரியர் ஆறு மணி நேரத்தைப் பிள்ளைகளுக்குப் பயனுள்ள வழியிலேயே செலவழிப்பார் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. ஆசிரியர் ஆறு மணி நேரத்தில் கற்பிக்கும் பாடத்தை, ஒழுக்கத்தை, நடத்தையை, உணர்வை மீதி பதினெட்டு மணி நேரங்களிலும் பின்பற்றிப் போற்றி நடக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகளுக்கு உணர்த்துவதும், அதற்குத்தக பிள்ளைகளை நடக்கச் செய்வதுமே பெற்றோர்களின் பெருங் கடமையாகும்.

பிள்ளையின் தனித்திறனை, இயல்பை, நோக்கத்தை, ஆசிரியரைவிட பெற்றோரே சரியாகவும் முழுமையாகவும் அறிய முடியும். எனவே, திறமை, இயல்பு. நோக்கம்—இவற்றிற் கேற்ப தக்க பாடங்களைத் தேர்த்தெடுக்கப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் உதவி புரிய வேண்டும். பள்ளியிலிருந்து வந்ததும் பிள்ளைகள் பள்ளியில் படித்த பாடங்களைப் பற்றியும், அறிந்த விஷயங்களைப் பற்றியும் பெற்றோர்கள் கேட்டறிய வேண்டும். இப்படிக் கேட்டறிவதன் மூலம், தம் பிள்ளைகள் எந்த அளவுக்குப் பாடங்களைக் கிரகித்துக் கொண்டுள்ளார்கள் என்பதை உணர்ந்து அவர்கள் மேலும் சிரத்தையோடும் தெளிவோடும் படிக்கத் தக்க வகையில் அவர்களுக்கு அறிவுரை கூறவும், வழிகாட்டவும் பெற்றோர்கள் பொறுப்புடையவர்களாக இருக்க வேண்டும்.

பிள்ளைகளின் மனதில் அவர்கள் மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பதிய வைப்பதுதான் பெற்றோர்களின் முதற் கடமை. ஆசிரியர்,மேலோர், பெரியோர் அனைவரையும் மரியாதையோடு அழைக்கவும், அவர்களுடன் பண்போடு பழகவும் பிள்ளைகளைப் பழக்க வேண்டும். மாதா, பிதா, குரு தெய்வம்என்ற பொன்மொழித் தொடரை மனப் பாடத்திற்காக மட்டும் சொல்லித் தராமல், வாழ்க்கைப் பாடமாகவும் வாழ்வில் தவறாது கடைப் பிடிக்க வேண்டிய நன்னெறி பாடமாகவும் பிள்ளைகளின் மனதில் பெற்றோர்

புகட்ட வேண்டும். நீதி, உயர்ந்த மதி, கல்வி அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என்பதைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவதோடு அம்மேலோர்களிடம் பண்புடனும் பணிவுடனும் நடக்கப் பெற்றோர்கள் பிள்ளைகளை வழி நடத்த வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மீது காட்டும் அதிகமான பிரியம்—குறிப்பாக ஒரே ஒரு பிள்ளையையுடைய பெற்றோர்கள் கொடுக்கும் செல்லம்—பிள்ளைகள் தன்னலமிக்கவர்களாகவும், தன்னோக்கே சரிநோக்கு என்ற பிடிவாதங் கொண்டவர்களாகவும், பணிவும் அடக்கமும் அற்றவர்களாகவும் ஆகிவிடக் காரணமாகின்றது. சின்னஞ்சிறு பிராயத்திலிருந்தே "எல்லா விஷயங்களிலும் நீ உன் சிந்தனைப்படி உன் வழியில் செல்லக் கூடாது" என்ற சித்தாந்தத்தைப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் கற்பிக்க வேண்டும். பிள்ளைகளை உத்திரவிடும்போது அவ்வுத்திரவுகள் உறுதியான உத்தரவுகளாக இருத்தல் வேண்டும். அவ்வுத்திரவுகளை ஏற்று நடப்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதைக் குழந்தைகள் உணரச் செய்ய வேண்டும்.

இவ்வகையில் தாய்மார்களுக்கு ஓர் எச்சரிக்கை கூறவேண்டியுள்ளது. பிறவியின் இயல்பாகப் பிள்ளைகள் தாயின்மீது அதிகமான அன்பும் பிரியமும் உடையவர்களாக இருக்கின்றார்கள். தந்தையிடமோ சற்றுப் பயமும் பணிவும் உடையவர்களாக இருக்கின்றார்கள். தாயிடம் உள்ள அன்பே—அல்லது தாய் காட்டும் அன்பே குழந்தைகள் அன்னையிடம் அச்சமற்று அடங்கொண்டவர்களாகக் காரணமாகின்றது. குழந்தை தனக்கு அடங்கவில்லை என்பதையோ, குழந்தையின் மற்றக்குற்றங் குறைகளையோ தாய், பிள்ளைகளுக்கு முன்பாகவே தந்தையிடம் சொல்லிக் கண்டிக்கச் சொல்லக் கூடாது. பிள்ளைகளின் முன்பாக அவர்களின் நடத்தையைப் பற்றிக் கணவரிடம் முறையிட்டால் குழந்தைக்குத் தந்தையிடம் அச்சம் தோன்றுமே தவிர, தாயிடம் பயம் விட்டுப் போகும்; அலட்சியமே ஏற்படும். பெற்றோர்களுக்கு அடங்கிய பிள்ளைகளும், பெரியோர்களுக்கு அடங்கிய இளையோர்களும், குடும்பத்தின் ஒழுங்கை, கௌரவத்தைக் கடைப்பிடித்து நடப்பவர்களும் அடங்கிய இல்லமே அன்பும் அமைதியும் நிலவும் இன்பக் குடிலாக, நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்ற பாவேந்தர் பாரதி தாசனின் மொழிப்படி விளங்கும்.

பணிவு-அடக்கம் இவைகளுக்கு அடுத்தபடியாகக் குழந்தைகள் கற்க வேண்டியது உண்மை பேசுவதேயாகும். எந்த நிலையிலும் எப்பொழுதும் உண்மை பேசுவதையே ஒவ்வொரு பிள்ளையும் கற்க வேண்டும்.

"பொய் சொல்லக் கூடாது
பாப்பா—என்றும்
புறஞ்சொல்லக் கூடாது
பாப்பா"

எனப் பாப்பாப் பாட்டை சொல்லிக் கொடுப்பதோடு...ஏன் பொய் சொல்லக் கூடாது பொய் சொன்னால் என்னென்ன தீமைகள் துன்பங்கள் ஏற்படும் என்பதை யெல்லாம் அவர்கள் மனதில் பசு மரத்தாணியெனப் பதியும்படி சொல்லித்தரல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையையும் பொய் பேசுதலை வெறுக்கும் இயல்புடையவர்களாக வளர்க்க வேண்டும். அவர்கள் பொய் பேசுதலைக் கண்டு பிடித்தால் தயவு தாட்சண்யமின்றிக் கடுமையாகத் தண்டிக்க வேண்டும். உலகில் வெறுக்கத் தக்கவைகளிலெல்லாம் மிகவும் வெறுக்கத்தக்கது பொய்யே என்பதையும் அவர்களுக்குச் சொல்லித் தரல் வேண்டும். பொய் சொன்னால் கண்டு பிடித்து விடுவார்கள் என்றும் அதன் காரணமாக நம் மீதுள்ள நம்பிக்கை போய் விடும் என்பதையும் பின்பு உண்மையைச் சொன்னால்கூட யாரும் நம்பமாட்டார்கள் என்பதையும் ஒவ்வொரு பிள்ளையும் உணரும்படி செய்ய வேண்டும்.

எந்தக் குழந்தையும் அடம்பிடிக்கும் குழந்தையாகப் பிறப்பதில்லை. வளரும் சூழ்நிலையிலேயும் தன்மையிலேயுந்தான் அவர்கள் அடங் கொண்டவர்களாக மாறிவிடுகின்றனர்கள். விரும்பிய பொருள் கிடைக்காத போது குழந்தைகள் அதனைப் பெறுவதற்காகக் கூக்குர லிடவும் செய்கின்றனர்கள். விரும்பியதை அடையும் வரையில் இப்பிடிவாதத்தை அவர்கள் கைக்கொள்ளுகிறார்கள். இக் குணத்தை அரும்புப் பருவத்திலேயே அவர்களிடமிருந்து அகற்ற மிகச் சரியான வழி, பிடிவாதம் பிடித்தாலும்,கூச்சலிட்டாலும், அழுதாலும் அவர்கள் விரும்பியதைக் கொடுக்காமல் இருப்பதுதான் ஆகும். அவ்வாறு குழந்தையின் அழுகையை அலட்சியப் படுத்திக் கடு மனத்துடன் இருப்பதுஇரக்கமற்ற செயலாகிவிடாது.இதனால்குழந்தை விரைவிலேயே தன் உணர்ச்சிகளை ஆசையைக்கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதை உணர்ந்து கற்றுக் கொள்ளும். பெற்றவர்கள் இவ்விஷயத்தில் பொறுமையும் உறுதியு முள்ளவர்களாக நடந்து கொண்டால், சிணுங்குதலும், சிடுமூஞ்சித் தனமும், கோபமும், கூக்குரல முகையும், பிடிவாதமும் நல்ல குணங்கள் அல்ல என்பதைப் பிள்ளைகள் உணருவார்கள். இது அவர்களின் வாழ்க்கைக்கு மிக்க துணையாக இருக்கும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பைப் பால பருவத்திலிருந்தே பிள்ளைகளிடம் வளர்க்க வேண்டும். தனக்கே எல்லாம் என்ற குறு நோக்கமின்றி மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற பெரு நோக்கத்தில் பிள்ளைகளை ஊக்கப் படுத்த வேண்டும். எல்லாம் இவ் வுலகில் உண்டு. மற்றவர்களுக்கு உதவுபவராக வாழ வேண்டும் என, பிள்ளைகளுக்குச் சொல்லிச்

கொடுக்க வேண்டும். இதனால் தன்னலம் அவர்களிடமிருந்து மறைந்து போகும். பிள்ளைகளிடமிருந்து தன்னலம் முழுமையாக நீங்க அவர்களை, அவர்களை யொத்த மற்றப் பிள்ளைகளோடு தயக்கமின்றிப் பழகச் செய்ய வேண்டும்.

நாம் எக்குழுவில் பழகுகின்றோமோ எந்தக் குடும்பத்தில் வாழ்கின்றோமோ, அக்குழுவிற்காக, குடும்பத்திற்காகவே நாம் வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தை அவர்கள் பல பிள்ளைகளோடு கலந்து விளையாடுவதால், பழகுவதால் அறிந்து கொள்ளுவார்கள். இதையே, 'கூடி விளையாடு பாப்பா'' என அமரகவி சிறப்பாகச் சொன்னார்.

''காலை எழுந்தவுடன் படிப்பு —பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா''

என்றும் சின்ன சிட்டுக்களுக்கு காலத்தை வகுத்துக் காரியமாற்ற வேண்டிய வழியைக் கனிரசப் பாடலில் சொல்லுகின்றார் கவிஞர். காலம் பொன் போன்றது. அக்காலத்தின் அருமையை உங்கள் பிள்ளைகள் உணரும்படி நீங்கள் செய்ய வேண்டும். இழந்து விட்ட பணத்தைக் கடுமையாக உழைப்பதன் மூலம் பெற்று விடலாம். ஆனால், கடந்துவிட்ட ஒரு விநாடியைக்கூட என்ன முயற்சி செய்தாலும் திரும்பப் பெற முடியாது—என்பதைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளச் செய்யுங்கள். குழந்தைகளை ஒரு விநாடி கூடச் சோம்பலாக இருக்க விடாதீர்கள். ஓய்வு நேரத்தையும் உபயோக கரமாகக் கழிக்கப் பயனுள்ள பொழுது போக்குகளைக் கற்றுக் கொடுங்கள்.

எப்பொழுதும் வேலை விளையாட்டே இல்லை என்பது பிள்ளைகளை உற்சாகமற்றவர்களாக்கி விடும். எப்பொழுதும் விளையாட்டு; வேலையே இல்லை என்பதோ அவர்களைப் பயனற்றவர்களாக்கிவிடும். எனவே, அவர்கள் ஒரு தினத்தை எப்படி எப்படிச் செலவிட வேண்டும் என்பதைப் பெற்றோர்கள் வகுத்துக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில்தான் உணவு கொடுக்க வேண்டும். படிப்பது என்பதும் குறிப்பிட்ட நேரத்தில் தான் இருக்க வேண்டும். விளையாடுவதற்கும் குறிப்பிட்ட நேரத்தைத்தான் பிள்ளைகளுக்குத் தர வேண்டும். அவர்கள் பள்ளியிலிருந்தும் விளையாட்டிலிருந்தும் வீட்டிற்குத் திரும்பிவரும் நேரமும் தவறாது இருக்கக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

செய்வதற்கு ஏதுமில்லாத நேரங்களில் பிள்ளைகளைச் சோம்பி இருக்க விடாதீர்கள். நல்ல புத்தகங்களைப்படிப்பது, வீட்டிற்குள்ளேயே விளையாடும் சிறு விளையாட்டுக்களை விளையாடுவது, ஆடல் பாடல் ஆகியவற்றில் 'பிசி'யாக

தையும் வேலை செய்ய வேண்டியிருந்தாலும் கடுமையாக மனதை ஒருமைப்படுத்தி உழைக்கவேண்டுமென்பதையும் உங்கள் குழந்தைகளின் மனதில் பதியச்செய்யுங்கள். எத்தொழிலும் இழிவானதல்ல ; எல்லாவேலையும் சிறந்தவையே என்பதைப் பிள்ளைகள் உணரச் செய்யுங்கள். உழைப்பது என்பது வாழ்க்கையின் வெற்றிக்கே. உல்லாசத்திற்கோ வெற்று ஆரவார மகிழ்ச்சிக்கோ அல்ல என்பதையும் கற்பியுங்கள்.

எந்த அலுவலும் தாழ்மையானதென்றோ கண்ணியக் குறைவானதென்றோ குழந்தைகள் கருதும்படி செய்து விடாதீர்கள். குப்பை கூட்டுதல், பாத்திரங்கள் சுத்தம் செய்தல் போன்றவற்றை வேலைக்காரர்களின் அலுவல் என்று அலட்சியமாகவோ கீழ்மையாகவோ அவர்கள் நினைக்கும்படி செய்துவிடாதீர்கள்.

குழந்தைகளோடு நெருக்கமான தொடர்பையும் அவர்கள் யாருடன் பழகுகின்றார்களோ அவர்களைப் பற்றியும் அறிந்து கொள்ளுங்கள். தீய பழக்கங்கள் நல்ல பழக்கங்களைவிட எளிதாகப் படிந்துவிடும் என்பதை மறந்துவிடாதீர்கள். விரும்பத்தகாத பிள்ளைகளோடு உங்கள் பிள்ளை பழகினால் அத்தொடர்பைத் துண்டிப்பதிலோ கண்டிப்பதிலோ காலந் தாழ்த்தாதீர்கள் ; தயக்கம் காட்டாதீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன்மீது நம்பிக்கையுள்ளவர்களாக உங்கள் பிள்ளைகளை வளருங்கள். சரியான முறையில் மற்றவர்களைப் புண்படுத்தாத இடையூறு செய்யாத வகையில் உங்கள் மதாச்சார அனுஷ்டானங்களை உங்கள் பிள்ளைகள் கடைப் பிடிக்கக் கற்பியுங்கள். தனக்குத் தானே உண்மையுள்ளவர்களை அனைவருக்கும் தொண்டு செய்பவர்களை அன்பு நெஞ்சங் கொண்டவர்களை இறைவன் இரட்சிக்கின்றான் என்பதையும் உங்கள் பிள்ளைகளின் இளமையில் ஆழப் பதியுங்கள்.

இவ்வாறு உங்கள் பிள்ளை கவனத்துடனும் பொறுப்புடனும் வளர்க்கப்பட்டால் ஏடுதூக்கிப் பள்ளியில் இன்றுபயிலும் உங்கள் செல்வம் நாளை நாடுகாக்கும் தலைவனாக, பாரத நாட்டுத் திருமகனாக, வழிகாட்டும் ஒளிவிளக்காக வளருவார்கள் என்பது திண்ணம்.

கல்வித்துறை அறிவிப்புகள்

1. ஆட்சிமொழி—தமிழ் அரசு அலுவலகங்களில் தமிழில் எழுதுவது-தமிழாக்கம்பற்றி.

1.	Primary School	... தொடக்கப் பள்ளி
2.	Middle School	... நடுநிலைப் பள்ளி
3.	High School	... உயர்நிலைப் பள்ளி
4.	As a special case	... தனிச் சலுகையாக, தனி வகையாகக் கருதி
5.	Structural stability certificate	... கட்டுமான உறுதிச் சான்றிதழ்
6.	Valuation certificate	... மதிப்பீட்டுச் சான்றிதழ்
7.	In the field of educatian	... கல்விப் பணியில்
8.	Chief Educational Officer	... முதன்மைக் கல்வி அலுவலர்
9.	Secretarial course	... செயலகப் பணிக் கல்வி
10.	Commercial course	... வாணிகப் பணிக் கல்வி

தமிழ்நாடு ஆட்சிமொழிக் குழுச்செயலாளரின் கடிதம்.

ஒ. மு. எண். 3645/68 ஈ. நாள் 10—10—68.

2. தொடக்கக்கல்வி—உதவி பெறும் பள்ளிகள்—உயர் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலைத்தகுதி ஆசிரியர்கள்—குறுகியகால பி.டி. பயிற்சி பெறும் காலத்திற்கு—மானியம் நிர்ணயித்தல் பற்றியது.

குறுகியகால பி. டி. பயிற்சி பெறும்படி அனுப்பப்பட்டுள்ள இடைநிலைத் தகுதி ஆசிரியர்கள் சார்பாகக் கற்பித்தல் மானியம் நிர்ணயிக்கலாம். அவர்களுக்கென்று அனுமதிக்கப்பட்டுள்ள அரைச் சம்பள அடிப்படையில் மானியத்தை நிர்ணயிக்கவேண்டும்.

அரசின் ஆணை எம். எஸ். எண். 1542-கல்வி-தேதி- 4-10-68.

மாணவர், பெற்ருேர் கடமை

ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி மாணவர்கள் பள்ளிகள், கல்லூரிகளை பகிஷ்கரிப்பது அதிகமாகிக் கொண்டு வரும் இந்தச் சமயத்தில், மதுரையில் நடந்த ஒரு பெற்ருேர்கள் கூட்டம் இதற்குச் சில உருவான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். ஜனவரி 27வ- யன்று கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட விருக்கின்றன. அன்று கல்லூரிகள் நடக்க முடியாமல் ஏதாவது செய்யப்பட்டால், அதைத் தடுப்பதற்காக ஒரு செயற் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. பள்ளிகள், கல்லூரிகளில் படிப்பவர்களை பொதுப்படையாக மாணவர்கள் என்று அழைத்தாலும், அவர்களும் மற்றெல்லோரையும் போல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான். அவர்களுடைய நடத்தைக்குக் குடும்பத் தலைவர்கள் அல்லது பெற்ருேர்கள் தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். காலம் தாழ்ந்தாவது பெற்ருேர்கள் தம்முடைய இந்த முதற் கடமையை உணர ஆரம்பித்திருப்பதை வரவேற்கிருேம். மதுரையில் தோன்றியுள்ள இந்தப்பெற்ருேர்களின் இயக்கம் தமிழ்நாடு பூராவிலும் பரவி, மாணவர் சமூகத்தினரிடையே அமைதியான சூழ்நிலை ஏற்படுவதற்கு உதவி புரிய வேண்டுமென்று விரும்புகிருேம்.

திடீரென்று மீண்டும் இப்போது மாணவர்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பிப்பதற்குப் போதுமான, நியாயமான காரணங்கள் இல்லை யென்பதே பொதுவான கருத்தாகும். பரீட்சை சமயங்களில் தான் இம்மாதிரி கிளர்ச்சிகள் ஆரம்பிக்கப் படுகின்றன. பரீட்சைகளைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்துடன்தான் மாணவர்கள் இப்படிச் செய்கிருர்களென்று பலர் நினைக்கிருர்கள். இது சற்று மிகைப்பட்டதாயிருக்கலாம். ஆனுல், பலரிடையே இம்மாதிரி கருத்து ஒன்று நிலவி வருகிறது என்பதை மாணவர்களே அறிவர். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு திருச்சியில் நடைபெற்ற மாணவர் மகாநாட்டில் ஒரு மாணவர் பேசும் போது, இம்மாதிரி பலர் நினைக்கிருர்களென்பதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். அந்த எண்ணத்தைப் போக்குவதற்கு மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். படிப்பில் நாட்டமில்லாத சில மாணவர்கள்தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்ற புகாருக்கு ஆதாரமே இல்லையென்று அடியோடு தள்ளிவிடுவதற்குமில்லை.

மதுரை அமெரிக்கன் கல்லூரி முதல்வர் திரு. தங்கராஜன் புதன் கிழமை யன்று பெற்ருேர்கள் கூட்டத்தில் செய்த பிரசங்கம் இதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் இருக்கிறது. "சுமார் 1600 பேர் உள்ள ஒரு கல்லூரியில் 200 அல்லது 300 மாணவர்கள் படிப்பில் நாட்டமில்லாமலும், பெற்ருேர்களுக்கு அடங்காமலும் இருக்கலாம். இம்மாதிரி மாணவர்களால் தான் மற்றப்பெரும்பான்மைமாண

வர்களின் படிப்பு கெட்டு, கல்லூரிகளும் பாழ்படுகின்றன" என்று பிரின்ஸிபால் திரு.தங்கராஜன் வேதனையுடன் கூறியிருக்கிறார். மாணவர்களும் இதை நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும். படிப்பு தான் மாணவர்களின் முதல் கடமை. தம்மைப் படிக்க வைப்பதற்காகத் தமது பெற்றோர்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை அவர்கள் யோசனை செய்து பார்க்க வேண்டும். பிள்ளைகள் படித்து, வேலைக்குப் போய்த் தம்முடைய தள்ளாத காலத்தில் தம்மைக் காப்பாற்றுவார்கள் என்ற எதிர்கால நன்மையை உத்தேசித்து, இன்று அவர்கள் தம் வயிற்றைக் கூட ஒடுக்கி, பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள். இந்தப் பொறுப்பை நிறைவேற்றக்கூடிய முறையில் நாம் நடந்துகொள்ளுகிறோமா என்பதை மாணவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா ?

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காகவே தாங்கள் கிளர்ச்சி நடத்துவதாக மாணவர்கள் கூறுகிறார்கள். தமிழ் நாட்டில் இப்போது ஆட்சிப்பொறுப்பை நடத்துபவர்களைவிட இந்த விஷயத்தில் அதிக அக்கறையுள்ளவர்கள் இருக்கமாட்டார்கள். இதை அவர்கள் கவனித்துக் கொள்ளமாட்டார்களா ? ரயில்களை நிறுத்துவது, கல்லெறிவது, சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பது போன்ற வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் பொது ஜன அனுதாபத்தைப் பெற முடியுமா ? ரயில்கள் மீதும், பஸ்கள் மீதும், கற்களை வீசினால் இந்தி மொழிக்கா காயம் ஏற்படுகிறது ? அவற்றில் பிரயாணம் செய்யும், ஒரு பாவமும் செய்யாத சாதாரண ஜனங்கள் தானே பாதிக்கப்படுகிறார்கள். இதையெல்லாம் மாணவர்கள் நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொள்ளுகிறோம்.

இந்த விஷயத்தில் மாணவர்களிடையேகூடக் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன என்பது தெளிவு. மாணவர் கிளர்ச்சி அரசியல் வாதிகளிடம் சிக்கிக்கொண்டு விட்டது என்ற காரணத்திற்காக மதுரை இந்தி எதிர்ப்பு மாணவர் செயற் கமிட்டியின் தலைவரும் காரியதரிசியும் ராஜினாமாச் செய்து விட்டார்கள். இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லையென்றும் அவர்கள் கூறியுள்ளனர். பெரும்பாலான மாணவர்களுக்குக் கிளர்ச்சியின் இன்றைய தன்மை பிடிக்கவில்லையென்று நினைப்பதற்கான அறிகுறிகள் நிறைய இருக்கின்றன. மதுரைத் தலைவர்களின் உதாரணத்தைத் தொடர்ந்து மேலும் பலர் இந்தச் சிக்கலிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள விரும்புகிறார்களென்றும் அறிகிறோம். அதுதான் சரியானது.

பரீட்சைகளுக்கு இன்னும் இரண்டு மாதங்கள்கூட இல்லை. இன்று முதலாவது மாணவர்கள் தம்முடைய போர்க்கோலத்தைக் களைந்து பரீட்சைக்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளும் வேலையில் தீவிரமாக ஈடுபட வேண்டு

மென்று கேட்டுக்கொள்ளுகிறோம். இல்லையேல் பரீட்சைகளைத் தவிர்ப்பதற்காகத்தான் சிலர் இந்தி மாதிரி தகராறுகளைக் கிளப்பிவிடுகிறார்கள் என்ற அவப்பெயர் நிலைத்துவிடும். மாணவர்களுக்கு மட்டுமின்றி, பெற்றோர்களுக்கும் இதில் முக்கிய பொறுப்புண்டு. தம்முடைய பிள்ளைகள் மற்றவர்களுடைய படிப்பைக் கெடுப்பதற்குப் பெற்றோர்கள் இடம் கொடுக்கக் கூடாது. இதில் அவர்கள் கண்டிப்பாகத்தான் இருக்கவேண்டும். இன்று இளைஞர்களாயிருப்பவர்கள்தான் நாளை நாட்டில் பொறுப்பேற்கப் போகிறார்கள். அதற்கு உங்களைத் தயார் செய்து கொள்ளுங்கள். அரசியல்வாதிகளின் வேலைகளை அரசியல்வாதிகளிடமே விட்டு, நீங்கள் படிப்பில் கவனம் செலுத்துங்கள் என்று தாழ்மையுடன் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

—"தினமணி"

புதுமுறை சங்க வாய்பாடு

V. K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

'மனிதன்' என்பவன்!

வீ. ரா. சந்திரன்

'மனிதன் ஓர் அரசியற் பிராணி' என்ருன் பேரறிஞன் பிளேட்டோ. இன்னும் சிலர் மனிதன் என்பவன் பல்வேறு வகைப்பட்ட உணர்ச்சிக் குவியல்களின் மொத்த வடிவம் என்பார்கள். நாம் எதனை ஏற்றுக் கொள்வது ?

'மனிதன் பிரச்னைக் குரியவன் தானே ! அவனது வாழ்க்கை என்றுமே ஒரு வினக்குறியாகவே இருந்திருக்கிறது. சில நேரங்களில் அது வியப்புக் குறியாக இருந்து சிலரை வியப்பில் மூழ்கடித்திருக்கக் கூடும். அல்லது இன்னும் சில நேரங்களில் அது முற்றுப் புள்ளியாக முடிந்து பலரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கக்கூடும். கிரேக்க நாட்டறிஞன் [மன்னிக்கவும் ! சாக்ரடீஸ் கிரேக்க நாட்டிற்குமட்டுமே உரியவன் அல்லன். அவ்வாறு அழைப்பது அந்த மாமேதையை அவமானப் படுத்துவதாகும். ஏனென்ருல் அவன் பெருமிதத்தோடு சொன்ஞன் :—"I am not an Athenian nor Greek, but a citizon of the world."]

அந்த உலகத் தத்துவ மேதை மிகவும் கர்வத்தோடு சொன்ஞன்.

'பலர் உண்பதற்காகவே வாழ்கிருர்கள் ! நானே வாழ்வதற்காகவே உண்கிறேன் !' என்று. அவன் தன்னை இங்கே ஒரு 'மனிதனைக் காட்டிக் கொள்கிருன்.

'டயக்னஸ்' என்னும் பேரறிஞன் பட்டப் பகலில் கையில் ஒரு விளக்கினைப் பிடித்தபடியே இங்குமங்குமாய் அலைந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்ற சிலர் வியப்புடன் அவனை நோக்கிக் கேட்டனராம்.

'ஐயனே !...இந்தப் பட்டப் பகலில் விளக்கொளியில் நீயாரைத் தேடுகிருய் ?" என்று.

அதற்கு அந்தப் பெரியவனே கொஞ்சமும் தயங்காமல் மிகவும் ஆணித்தரமாகச் சொன்ஞனும் !

"நான் ஒரு மனிதனை'த் தேடுகிறேன் !" என்று.

அப்படியாஞல் 'மனிதன்' என்பவன் தான் யார் ? 'டிரைடன்' என்னும் அறிஞனே' மனிதர்கள் எல்லோரும் வளர்ந்த குழந்தைகளே !' என்று செல்லமாக அழைக்கிருன், இந்தச் சொற்களைக் கூர்ந்து கவனிக்கும்போது 'மனிதர்களெல்லோரும் உள்ளத்தால் முதிர்ச்சியுருத முட்டாள்களே !' என்ற கருத்தும் தொக்கி நிற்கவில்லையா ?

ஒரு 'மனிதன்' தவறிழைத்து விட்டான் என்று குற்றம் சுமத்தி அவனை எல்லோருமாகச் சேர்ந்து சிறையில் அடைத்து விட்டார்களாம். அப்போது அந்தச் 'சிறைப் பறவை' என்ன நினைக்குமாம் தெரியுமா ?...

'மனிதனைச் சிறையிலிட்டால் அவனைத் திருத்தி விடலாமென்று நினைக்கிறார்களே. அது வெறும் பொய்க் கனவு! எனக்கு மரண தண்டனை விதித்திருந்தால் நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பேன். என்னை இங்கு இவர்கள் சாகவும் விடவில்லை ; பிழைக்கவும் விடவில்லை.' என்று தான் அவன் கூறுவானும். இப்படி நான் கூறவில்லை. ஒரு புகழ்பெற்ற எழுத்தாளர் இப்படி எழுதியிருக்கிறார். அது போகட்டும். எனக்கு இங்கு ஒரு கதை நினைவிற்கு வருகிறது. பைபிளில் வருவது.

ஒரு பெண் நடத்தை கெட்டவள் என்பதற்காகச் சில 'மனிதர்கள்' ஒன்ருகக் கூடி அவள் மீது கற்களையும் கழிகளையும் வீசுகிறார்களாம். அப்போது ஏசுபிரான் அந்த வழியாக வருகிருராம், அவர்களைப் பார்த்து அவர் கூறுகிருராம்.

'எவனொருவன் தன் வாழ்விலே பாவம் செய்யாதவனே அவன் இவள்மீது கல்லை எடுத்துப் போடட்டும்!'' என்று. அதன் பிறகு அவளை அடிக்கும் துணிவு அங்கிருந்த எவருக்கும் எழவில்லையாம்!......அப்படியானுல் 'மனிதர்கள்' அனைவருமே 'வெறும் பாவப் பிண்டங்கள்தாமா ?'

கவியரசர் தாகூர் ஓரிடத்தில் குறிப்பிடுகிருர்; ''மனிதனுடைய இன்பத்தில் ஒரு பகுதிதான் நனவு! எஞ்சி இருப்பவைகளெல்லாம் கனவு தான்!'' என்று. அப்படியானுல் தன் வாழ்நாளில் பெரும் பகுதியைக் கற்பனையுலகிலேயே கழித்துக் கொண்டிருக்கும் ஓர் அசட்டுப் பிறவிதான் 'மனிதனு?'

'மனிதன் ! எத்துணை உயர்வாக இச்சொல் ஒலிக்கிறது !' என்ருர் பாட்டாளி வர்க்க இலக்கியத்தின் பிதா மார்க்ஸிம் கார்க்கி. அப்படியானுல் 'மனிதன்' என்பவன் 'மனிதாபிமானத்தின் சின்னமா ?'

அதுவும் போகட்டும். இப்போது இன்னெரு சிக்கலான கேள்வி எழுகிறது. 'மனிதன்' எதற்காகத்தான் இந்த உலகில் வாழவேண்டும் ?'

'வாழ்க்கையில் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்யவேண்டும். நம் அன்பினுல் அவர்கள் துன்பச் சுமையைக் குறைக்க முயலவேண்டும். இதைக் கூட நம்மால் செய்ய முடியவில்லையென்ருல் நாம் எதற்காகத்தான் இந்த உலகில் வாழவேண்டும் !'' என்று கேட்கிருர் ஜார்ஜ் ஒலியட். அதாவது மனிதன் தனக்காக அல்லாமல் மற்றவர்களுக்காகத்தான் வாழவேண்டுமா ? இன்றைய உலகில் அப்படித்தான் ஒவ்வொரு மனிதனும் வாழ்ந்துகொண்டிருக்கிருனு? அப்படித்தான் அவன் வாழவேண்டுமா ? அது தான் முறையா ?...

'மனிதன்' அடிக்கடி சோர்ந்து விடுகிறனே அது ஏன் ?...

அவன் மனத்தில் இருள் சூழ்ந்து அழுக்கு நிரம்பி வழிகிறதே அது ஏன்?...

ஏன் தெரியுமா ?......'மனிதன்' தேங்கி நிற்கிறனும் ! அதனுல் தானும் !

தண்ணீர் அழுக்கடைவதில்லையாம் ! ஏனென்ருல், அது ஓடிக் கொண்டேயிருக்கிறதாம் !

தண்ணீரின் ஒரு துளிதான் நதியாக, மகாநதியாக, பிறகு பெரிய கடலாக மாறுகிறதாம் !

எப்படித் தெரியுமா ?...அது ஓடிக்கொண்டேயிருக்கிறதே, அதனுல் தானும் ! இதனுல்தான் சதுரசேன சாஸ்திரி 'மனித'னைப் பார்த்துக் கூறுகிறுர்.

'ஏ, மனிதா ! நீ தேங்கி நிற்காதே ஓடிக் கொண்டே இரு ! முன்னேறிக் கொண்டே இரு !'' என்று.

சரி சரி இந்தக் கட்டுரையை நான் முடித்து விடுகிறேன். 'மனிதன்'. இப்படித்தான் வாழவேண்டும் என்ற அறிவுரையோடு !

'மனிதன்' எப்படி வாழவேண்டும் ?...தாகூர் கூறுகிறுர் 'நாம்' இப்படித்தான் வாழ வேண்டுமென்று.

''சிதைந்து தேயும் செல்வத்தைப் பெறுவதற்காக இறைஞ்சி ஏங்கித்திரிவது மிகவும் இரங்குதற்குரியது. செல்வத்திற்காக ஏங்குவதை விட்டு செம்மையைத் தாங்கி வாழ்வோம். சாவுக்குப் பின்னும் நீடித்து நிலைக்கும் வாழ்க்கையை, எந்தச் சூழலிலும் எழுந்து சிறக்கும் வாழ்க்கையைப் பற்றுவோம். அதன் வாயிலாகப் பரமனையே காண்போம். மண்ணேடு மண்ணுய் மக்கிக் கிடக்கும் நம்மை மேன்மைப் படுத்தி ஈடேற்றும் நித்ய சத்தியத்திற்காக வாழ்வோம்; உருக்குலையும் பொருள்களால் அன்றி உள்ளொளியாலும், அதிகாரத்திற்காக அன்றி அன்புப் பிணைப்பாலும், நம் வாழ்வுக்குப் பொன் முலாம் பூசும் நித்திய சத்தியத்திற்காக நாம் வாழ்வோம்.''

என்ன சொல்கிறீர்கள் ?...'அப்படி' வாழ உங்களுக்கு சம்மதம் தானு ?...இனி நாம் அனைவரும் விவேகானந்தரைப் போல்—அண்ணல் காந்தியடிகளைப் போல்—வாழவேண்டும் !

இன்னும் சிறந்த வாழ்க்கை ; இன்னும் உயர்ந்த வாழ்க்கை ; காலத்தைத் தாண்டி நிற்கக் கூடிய வாழ்க்கையை நாம் வாழ்ந்து காட்டவேண்டும் !

'அது முடியுமா?' என்று கேட்டு விடாதீர்கள் ! 'முடியா விட்டால் போகிறது : ஆசைப்படுவதில் ஒன்றும் தப்பில்லையே !'

—'' காஞ்சி''

திகைப்பூட்டும் தீப்பந்துகள்

[துரை. முருகேசன் ; காரமடை]

❋

இரவு நேரம். வானம் முழுவதும் வாரி இறைத்த வைர மணிக் குவியலோ என்று தாரகைக் கூட்டங்கள் தக தகவென்று மின்னிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கண் கொள்ளாக் காட்சி நமக்கு வியப்பையும், மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றன.

திடீரென்று தீப்பிடித்தது போல் ஒரு காட்சி. ஒரு விநாடி திகைக்கிறோம். நட்சத்திரம் ஒன்று எரிந்து பிரகாசமாய் ஒளிப் பிழம்பாய்ப் பூமியை நோக்கிவிழுவதைக் காண்கிறோம். ஆனால் இவையெல்லாம் உண்மையில் நட்சத்திரங்கள் அல்ல, நட்சத்திரக் கூட்டங்கள். நமக்குப் பல இலட்சம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. நாம் வாழும் பூமியைவிட உருவத்தில் பெரியவையும் இருக்கின்றன. அவை விழுந்தால் நம் கதி!? நினைக்கவே நெஞ்சு திடுக்கிடுகின்றது.

அப்படியானால் ஆகாயத்தில் காணும் அந்த அற்புத விளக்குகள் என்ன ? அல்லாவுதீனின் மாயா விளக்கா ?! அல்ல !

இயற்கை அளித்த எண்ணிலா விந்தைகளில் இந்த ''எரி நட்சத்திரம்'' என்று நாம் நினைக்கும் தீப்பந்துகளும் ஒன்றாகும்.

பூமியை நோக்கி இரவு, பகலாக இம்மாதிரி விண் கற்கள் ஓயாமல் விழுந்து கொண்டே இருக்கின்றன. அதில் பெரும் பாலானவை மணல் போலிருக்கும். இவை இரும்பாலானவை. சில இரும்பும், கல்லும் கலந்தவையாக இருக்கும். சிறு சிறு கற்கள் முதல் பெரிய பாராங்கல் அளவுவரை மேலிருந்து பூமி மீது தீப்பந்துகள் போல உருண்டையாகவோ, பல வடிவங்களிலோ விழுவதுண்டு.

இந்த அதிசய அதியற்புத விண் கற்களில் ஒன்று அமெரிக்காவில் விழுந்ததாம். அதன் எடை பல டன்கள் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அரிசோனா என்ற இடத்தில் விழுந்த அந்தப் பயங்கர ஆகாயப் பாறை சுமார் ஒரு மைல் அகலத்திற்குப் படு பாதாளக் குழி ஒன்றை ஏற்படுத்தி விட்டது. பாறையின் அடிப் பாகத்தில் சுமார் 400 (நானூறு) அடி வரைக்கும் உள்ள பாறைகளைச் சுக்குநூறாக்கித் தவிடுபொடி ஆக்கிவிட்டதாம்.

இதுவரை இம்மாதிரியான பல டன்கள் எடையுள்ள விண் கற்கள் சுமார் 34 இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சைபீரியாவில் ஒரு காட்டில் பெரிய பாறையொன்று விழுந்ததால் நாட்டு மக்களுக்கு யாதொரு

நிங்கும் ஏற்படவில்லை. ஆனால், காட்டில் பல மரங்கள் அடியோடு அழிந்து போயின.

நெப்ராஸ்கா என்னுமிடத்தில் 1948-ல் கிட்டத்தட்ட ஒரு டன் எடையுள்ள விண் கல் விழுந்தது. மற்றொரு கல் சுமார் 750 பவுண்டு எடையுள்ளது; சிகாகோ பொருட் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. 30 டன் எடையும், மற்றொன்று 23 டன் எடையுமுள்ள இரண்டு விண் கற்கள் மெக்சிகோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன 10 அடி நீளம், 9 அடி அகலம், 4 அடி பருமனுள்ள விண்கல் ஒன்று தென் மேற்கு ஆப்ரிக்காவில் " க்ருட் பான்டின் " மாவட்டத்தில் விழுந்த இடத்திலேயே இருக்கின்றதாம்.

சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கும் சூரிய கணத்தைச் சேர்ந்த விண் கற்கள் சில சமயங்களில் புவி ஈர்ப்புச் சக்தியினால், பூமியின் மீதுள்ள காற்றோடு மோதி சூடேறி தீப்பந்துகள் போல மாறுகின்றன. இம்மாதிரியான மோதல் பூமிக்கு மேல் சுமார் 60 மைல் உயரத்தில் நடைபெறுகின்றது.

சாதாரணமாக நாம் காணும் கற்களுக்கும் எரி நட்சத்திரங்கள் எனப்படும் விண் கற்களுக்கும் சிறிது வேறுபாடு உண்டு. மேற் பரப்பு கருப்பு நிறமாகவும், மிருதுவாகவும், கண்ணாடிபோல் பளபளப்பாகவும், சிறுசிறு குழிகளோடும் உள்ளன. எரி நட்சத்திரங்கள், சாதாரண கற்களை வேறு படுத்திக் காட்டுகின்றன.

இக்கற்கள் பெரும்பாலும் மணல் கலப்பினாலும் மெக்னிஷயம் இரும்பு முதலியவற்றாலும், சில நிக்கலும், இரும்பும் கலந்ததாக இருக்கும்.

"பெர்சிட்ஸ்" என்னும் ஒரு வகை சிறு விண்கற்கள் ஆகஸ்டு மாதம் இரண்டு மூன்று வாரம் முன்னிரவில் குறைவாகவும், பின்னிரவில் அதிகமாகவும் விழுவதுண்டு

கிழிந்த தாவணி

— தாமரைக் கண்ணன் —

கிழிந்துபோன தாவணியைத் தைத்துக் கொண்டிருந்த சாலா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"என்ன அக்கா, அப்படியே அசந்து போயிட்டே?" என்று இளக்காரத்துடன் கேட்டான், எதிரே தோல் பெட்டியுடன் வந்து நின்ற சத்தியமூர்த்தி.

"என்னடா... திடீரென்று பட்டணத்திலேயிருந்து வந்துட்டே? பள்ளிக்கூடத்திலே லீவு விட்டுட்டாங்களா?"

"லீவு அவங்க விடலே, அக்கா! மாணவர்களாகவே......அதாவது நாங்களாகவே லீவு விட்டுக்கிட்டோம்."

"ஓகோ... அப்படியா? எப்போ திறப்பீங்க?"

"எங்களுக்கு விருப்பம் இருக்கறப்போ!"

"சத்தியம், எனக்குப் புரியல்லேடா. கொஞ்சம் புரியும்படியாச் சொல்லேன்!" என்ற சாலா, தான் தைத்துக் கொண்டிருந்த தாவணியையும் ஊசி நூலையும் கீழே வைத்துவிட்டு, கவனத்தோடு கேட்டாள். தம்பி இவ்வாறு பள்ளியை விட்டுவிட்டு வந்தது அவளுக்கு அடியோடு பிடிக்கவில்லை.

"அக்கா! நாங்கள் எல்லாம் யார்?"

"மாணவர்கள்!"

"நான்சென்ஸ்! மாணவர்கள்னு என்ன மரியாதையில்லாமல் சொல்றே? எங்க பொதுக் குழுவைக் கூட்டி உன்மேல் கண்டனத் தீர்மானம் போடுவோம். ஜாக்கிரதை!"

"சரிடா அப்பா! அப்படிச் சொன்னது தவறுதான்! மாண்புமிகு மாணவர்கள்! போதுமா?"

"ஆங்... அப்படிச் சொல்லு!"

சத்தியத்தின் கண்கள் வீட்டை ஒரு முறை துழாவின. "ஆமாம் அக்கா, அம்மா எங்கே?"

"கோயிலுக்குப் போயிருக்காங்கடா!"

"அப்பா?"

"பொன்னேரிக்குப் போயிருக்காரு"

'அப்பாடா' என்று பெருமூச்சு விட்டான் சத்தியம்.

"சொல்லுடா சத்தியம், தேர்வு வரப்போகுது. ஒழுங்காப் படிச்சு முன்னுக்கு வருவோம்னு இல்லாமே ஏன் இந்த மாதிரிக் கூத்தெல்லாம் ஆடறீங்க?"

ஒரு கம்பீரமான ராஜ நடையுடன் சத்தியம் சொன்னான்: இதோ பார், அக்கா! நாங்க மாண்புமிக்க மாணவர்கள் இல்லையா? 'மேகலா' கொட்டகைக்கு ஆறு மணி ஆட்

டத்துக்குப் போறோம்னு அஞ்சு பேர் விடுதிக் காப்பாளரிடம் அநுமதி வாங்கிக்கிட்டுப் போனாங்க. இன்னும் அஞ்சு பேர் அவசரமாப் புறப்பட்டதால் சொல்லாமெ போயிட்டாங்க. படம் முடிஞ்சு திரும்பி வந்து பார்த்தா அஞ்சு பேருக்கு மட்டும் உணவு வச்சிருந்தாங்க. மற்றவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? நாங்க சண்டை கூடப் போடலே. ஏதோ போனாப் போகட்டும்னு ஆளுக்கு நாலு தோசை போட்டுக் கொடுக்கச் சொன்னோம், சமயற்காரரிடம். அவர் 'மாட்டேன்'னு நேராக விடுதிக் காப்பாளரிடம் போய்ச் சொல்லிட்டாரு.''

''சரி...சரி, புரியுது. விடுதியிலேயிருந்து சொல்லாமெ சினிமாவுக்குப் போன பசங்க மேலே அவரு நடவடிக்கை எடுத்தார். நடவடிக்கை எடுக்கக்கூடாதுன்னு மாணவருங்க சொன்னாங்க. அவர் கேக்கலே. உடனே தலைமையாசிரியரிடம் புகார் போச்சு. நீங்க எல்லாரும் கடமையுணர்ச்சியோட ஒற்றுமையா ஒரே கட்டுப்பாடா இருந்து 'ஸ்டிரைக்' பண்ணினீங்க...''

''சரியாச் சொல்லிட்டேக்கா. அதுவும் கண்ணியத்தோடு ஸ்டிரைக் செய்தோம்!''

''ரொம்ப அழகுதான்!''

''இல்லையா, அக்கா? ஒரு கல்லெடுத்து யாரையும் அடிக்கலே; கூச்சல் போட்டுக் கலாட்டாப் பண்ணலே; கண்கவரும் சுவரொட்டி போடல்லே. இருநூறு பேரும் பள்ளிக்கூடத்துக்கு எதிரிலும், உணவு விடுதி எதிரிலும் 'வாழ்க...ஒழிக' என்கிற நியாயமான ஒலிகளை விண்ணதிர எழுப்பினோம். தலைமையாசிரியர் எங்ககிட்டே எவ்வளவோ கெஞ்சிப் பார்த்துட்டார்!''

'நீங்களா அசைந்து கொடுத்திருப்பீங்க? யாரு, வீரத் தமிழ் மண்ணிலே பிறந்தவங்க இல்லையா? 'எங்களுக்கு மானமே முக்கியம்'னு சொல்லிட்டீங்க.''

''ஆமாம், அக்கா! அப்புறம் சொல்லணுமா?''

''சொல்ல வேணும்; எனக்கே புரியுது. 'நீதி வேணும்; நியாயம் வேணும். விடுதிக் காப்பாளரை மாத்துங்க; சமையல்காரரை வேலையிலிருந்து நீக்குங்க! இன்னு வேண்டுகோள் விடுத்திருப்பீங்க. இல்லேன்னா பசிக்கும் வரை உண்ணாவிரதம் இருப்போம்னு பயமுறுத்தி யிருப்பீங்க.''

''கரெக்ட்! அவ்வளவுதான். நிர்வாகிகள் உடனே பள்ளிக்கூடத்தைக் காலவரையில்லாமல் இழுத்து மூடிப்பூட்டிப் போட்டுட்டாங்க!'' என்று மார்தட்டிக் கொண்டான் சத்தியம்.

''அந்த நாடகம் முடிஞ்சதும் நீ உடனே பஸ் ஏறிட்டே வீட்டுக்கு. அப்படித்தானே?'' என்று தன் குமுறலையும் வெறுப்பையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் கேட்டாள் சாலா.

''இங்கேதான் அக்கா தவறு செய்துட்டே. நான் சும்மா பஸ் ஏறலே. ரிலீசான புதுப் படம் ரெண்டைப் பார்த்துட்டுத்தான் பஸ் ஏறினேன்.''

"விடுதிக்கும் உன் டியூஷனுக்கும் அப்பா நூறு ரூபா அனுப்பிஞரே, கிடைச்சுதா ?"

"நல்ல நேரத்திலே கிடைச்சுது. விடுதிக்கும் டியூஷன் ஆசிரியருக்கும் நாமம் போட்டுட்டேன்; நான் அருமையான கௌபாய் பாண்ட்டும் ஒரு டெரிலின் டீ சட்டையும் போட்டுக்கிட்டேன். இதோ பார்த்தியா ? பிரமாதமான கலர்..."

சத்தியம், தான் எடுத்து வந்த தோல் பெட்டியைத் திறந்து புதுத் துணிகளைக் காட்டினுன்.

சாலாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன; கண்கள் கலங்கின

"சத்தியம்...சத்தியம் !" மேலே பேச முடியாமல் விம்மினுள்.

அவளுடைய கலங்கிய கண்களைப் பார்த்துச் சத்தியம் திகைத்தான்.

"இதோ பார், அக்கா! நான் முரடன். துடுக்கானவன், உண்மைதான். ஆனுலும், உன் கண்களோ நம்ம அப்பா அம்மா கண்களோ கலங்கிஞ என்ஞலே தாங்க முடியாது, அக்கா !"

"என் கண்ணீருக்கே இப்படி வருந்தறியே...நம்ம அப்பாவும் அம்மாவும் ஒரு மாசமாத் தொடர்ந்து கண்ணீர் விடருங்களே, தெரியுமா தம்பி?"

வியப்பாலும் விவரிக்க வொண்ணுத திகிலாலும் சத்தியத்தின் புருவங்கள் நெரிந்தன :

"என்னைக் குழப்பாமல் சொல்லு, அக்கா !"

"இத்தனை நாளும் உனக்குத் தெரியக் கூடாது, தெரியக் கூடாதுன்னு நாங்க மறைச்சு வச்சிருந்ததை இப்போ சொல்றேன். அப்பா பொன்னேரிக்குப் போயிருக்கார். தெரியுமா ?"

"ஏன் அக்கா ?"

"இந்த வீட்டை நேத்துக்கடன்காரங்க வந்து ஜப்தி பண்ண வந்துட்டாங்க. அது சம்பந்தமா வேறு யார் கிட்டேயோ கடன் வாங்கப் போயிருக்கார் அப்பா. ரெண்டு வருஷமா மூவாயிரம் ரூபாய் வரை யாருக்காகக் கடன் வாங்கியதால் இந்த இக்கட்டான நிலை தெரியுமா ?"

"எனக்காகவா ?"

"சந்தேகம் இல்லாமெ! உன்னைப் பொன்னேரியிலேயே படிக்க வச்சிருக்கலாம். ஏதோ பட்டணத்திலே பெரிய படிப்புப் படிப்பேன்னு பெரிசா நினைச்சு, சொந்தக்காரங்க வீட்டிலே விட்டா உனக்கு வசதிக் குறைவாப் போயிடுமோன்னு பயந்து, உணவு விடுதியிலே உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்தார் அப்பா. நாங்க பணம் கடன் வாங்கிக் கஷ்டப்பட்டு அனுப்பறது தெரிஞ்சா உன் மனசு கலங்கிடுமேன்னு நெனச்சு, உனக்குத் தெரியாமெ நாங்க ராப் பகலா உழைச்சு, கஷ்டப்பட்டு..."

'போதும், அக்கா ! அதுக்கு மேல் சொல்லாதே. வேதனையா இருக்கு !"

அவள் சத்தியத்தின் கைகளைப் பற்றிக்கொண்டு, "தம்பி! நீ டெரிலின் சட்டை போட்டுக்கக் கூடாதுன்னு நான் சொல்லலே. நீ ராஜாவைப் போல் கண்ணுக்கு அழகா இருக்கிறதைப் பார்க்கத்தான்

னாங்க ஆசைப்படறோம். ஆனால் சத்தியம்! நீ வரும்போது நான் கிழிந்துபோன தாவணியைத்தைச்சு கிட்டிருந்தேன். தீபாவளிக்குக் கூட துணி எடுக்காமெ ரெண்டு மூணு கிழிஞ்ச துணியை வச்சுக் கிட்டே நான் காலம் தள்ளிக்கிட்டு வர்றேன். அம்மாவுக்கு மாத்துக் கட்டுக்கு மறு கட்டுப் புடவை இல்லே. அப்பாவுக்குக் கிழியாத வேட்டி இல்லே. இந்த நிலேயில் அப்பா நூறு ரூபா கடன் வாங்கி வந்து எங்களிடம் முப்பது ரூபா கொடுத்து, துணி எடுத்துக்கச் சொன்னார். நீ விடுதிக்கும் டியூஷனுக்கும் பணம் கட்டாமல் மத்தப் பையனுக எதிரே தலேகுனிஞ்சு நிக்கக் கூடாதேன்னு அம்மா இந்தப் பணத்தையும் சேர்த்து உனக்கு அனுப்பிடச் சொன்னுங்க. ஆனு நீயோ...? சத்தியம்! நீ படிச்சு எங்களுக்குச் சம்பாதிச்சுப் போடவேணுண்டா! நீயாவது உன் எதிர்கால வாழ்க்கையைச் சிறப்பா அமைச்சுக்க வேண்டாமா?'' என்ருள் உருக்கமாக

சத்தியம் மனம் நெகிழ்ந்தான். ''அக்கா! குடும்பக் கஷ்டம் தெரியாமெ என்னே நீங்க வளர்த்ததும் படிக்கவைக்கிறதும் தான் தவறு. எனக்காக நீங்க படும் துன்பம் தெரிஞ்சிருந்தா, நான் ஒழுங்காகப் படிச்சிருப்பேன்.''

''நம்ம குடும்பத்தில் மட்டும் அல்ல, சத்தியம்! நூற்றுக்குத் தொண்ணூறு மாணவர்களின் பெற்றோரும் நம்மைப்போல அளவு கடந்த கடன் தொல்லேகளில் உழன்று தங்களுடைய பிள்ளேகளேப் படிக்க வைப்பவர்கள்தான். இந்த மாதிரி நீங்க படிக்காமல் ஸ்டிரைக் செய்யற நேரத்தில் நாட்டுக்கும் வீட்டுக்கும் தங்களுக்கும் கேடு செய்யும் பிள்ளேகளேப்பெற்று விட்டோமே என்று அவங்க நெஞ்சம் எப்படிக் குமுறும் தெரியுமா?''

சாலாவின் அன்புப் பேச்சால் சத்தியம் திருந்தினன்: ''என் தப்பை உணர்கிறேன் அக்கா! ஒழுக்கத்துக்கு விரோதமா அநுமதியில்லாமல் சினிமாவுக்குப் போனவன், நான் தான். உணர்ச்சி வசப்பட்டு நான் என்னேக் கெடுத்துக் கிட்டதுமில்லாமெ, நூற்றுக் கணக்கான மற்ற மாணவர்களேயும் கெடுத்துட்டேன். இப்பவே போய்த் தலைமையாசிரியரிடமும் விடுதிக் காப்பாளரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் வந்து போனது அப்பா அம்மாவுக்குத் தெரிஞ்சா அவங்க மனசு உடைஞ்சுபோயிடும். அதனுல் நீயும் சொல்லாதே. நான் வர்றேன்.''

தோல் பெட்டியை எடுத்துக் கொண்டு விர்ரென்று வெளியே சென்ருன் சத்தியம். சாலா கண்களேத் துடைத்துக் கொண்டாள்.

அமெரிக்க செஞ்சிலுவைச்
- சங்கத்தின் துவக்கம் -

[ஏ. எம். ஜோப்]

※

சுமார் நூறு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். வட அமெரிக்காவில் ஒரு பண்ணையில் ஒரு சிறுமி தன் பக்கத்தில் நின்ற குதிரை ஒன்றைப் பார்த்த வண்ணமாய் இருந்தாள்.

''அப்பப்பா! எனக்குப் பயமாய் இருக்கிறதே !'' என்று திரும்பினுள் அவள். ஆனல் அவள் சகோதரனே அவளைக் குதிரையின் மேல் ஏறிச் சவாரி செய்யும்படி தூண்டிக் கொண்டிருந்தான்.

''பயப்படாதே, கண்ணே! நான் பக்கத்தில் இருக்கிறேன்.'' எப்படியோ ஒரு விதமாக அவன் தன் சகோதரியைக் குதிரையின் மேல் ஏற்றிவிட்டான். அவனும் அவள் பின்னல் ஏறி உட்கார்ந்து கொண்டு குதிரையைத் தட்டிவிட்டான். குதிரை காற்றுய்ப் பறந்தது.

இந்தச் சிறுமிதான் பின்னல் ''வீரப் பெண்மணி'' என்றும், ''யுத்தக் களத்துப் பெண் தெய்வம்'' என்றும் அழைக்கப்பட்டாள். இவள்தான் கிளோரா பார்டன். இவளுக்குக் கடவுள் மேல் தீவிர நம்பிக்கை உண்டு.

சிறு வயதில் கிளோரா மிகவும் லச்சைப்படுவாள். வீட்டை விட்டு அகலவே மாட்டாள். அவள் தந்தை ஒரு சேன வீரன். அவருக்கு அவளுடைய பயம் அர்த்தமே ஆகவில்லை. ஒருவேளை பள்ளிக்கூடத்தில் சேர்ந்தால், அவளுடைய பயம் தீருமென்று எண்ணி, சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்.

தான் ஒரு போர் வீரனின் மகள் என்பதை அவர் அடிக்கடி அவளுக்குஞாபகப்படுத்திக்கொண்டே இருந்தார். அந்த நினைவே அவளுக்கு வீரத்துவத்தைக் கொடுத்து விடும் என்று அவர் எண்ணினர் போலும் !

ஆனல் இந்த முயற்சிகள் ஒன்றும் பயன் தரவில்லை. அயர்ந்து ஒடுங்கிப் போனுள். முடிவில் வீட்டுக்கே திருப்பி அனுப்பப்பட்டாள். அப்பொழுது தான் கிளோராவுக்கு தன் மேல் கோபம் கோபமாக வந்தது. பின் குதிரை சவாரி செய்யவும், பால் கறக்கவும், இன்னும் தீரம் பெறுவதற்காகப் பல வேலைகளைச் செய்யவும் கற்ருள்.

பதினைந்தாவது வயதில் அவள் ஒரு உபாத்தியாயினிஆகிவிட்டாள். இந்த வேலை முதலாவது கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருந்தது. ஆனல் சிறிது காலத்திற்குள் அவளிடத்திலுள்ள பயம் எல்லாம் பறந்து போயிற்று.

கிளோராவுக்கு நோயாளி சிசுருஷை என்றால் மிகவும் ஆசை. சிறு வயதிலேயே இந்த ஆவல் அவளைப் பிடித்துக் கொண்டது. ஒரு முறை அவள் சகோதரன் விழுந்துகாயமுற்ற போது அவளே அவனுக்கு முதல் உதவி செய்தாள். அவன் சரியான ஆரோக்கிய நிலைக்கு வர இரண்டு வருஷங்கள் பிடித்தன. அது வரை அவளே எல்லா பராமரிப்பையும் செய்து, அவன் அறையிலேயே எப்பொழுதும் இருந்து, வேண்டியன செய்தாள். பின்னால் வந்த வாழ்வுக்கு இத்தகைய பயிற்சிகள் அவளுக்குப் பெரிதும் துணையாக நின்றன.

தேசியக் கலகம் மூண்ட போது கிளோரா பார்டன் வாஷிங்டனில் இருந்தாள். அப்போது காயம் பட்டவர்களுக்கான உதவி செய்வதைத் தானே ஏற்றுக் கொண்டாள். அவளுடைய தன்னலமற்ற பண்பு, தீரம், விடாமுயற்சி, இவை எல்லாம் அவளுக்குக் கீர்த்தியைச் சம்பாதித்துக் கொடுத்தன. உலகத்தில் வாழ்ந்த பெண்மணிகளில் மிகவும் சிரேஷ்டமானவள் என்று பெயர் வாங்கினாள். இவளே அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்தையும் ஆரம்பித்தாள்.

—“ நல்வழி ”

ஜப்பானில் அமோக அரிசி விளைச்சல்

தண்ணீரில் ஆழ்த்திப் பாதுகாக்கச் சோதனைகள்

ஜப்பானில் அரிசி விளைச்சல் அமோகம். இப்போது போல முன்பு ஒருபோதும் இவ்வளவு அமோகமாக அரிசி விளைச்சல் ஏற்பட்டதில்லையாம்.

ஜப்பான் மக்களின் தேவைக்குப் பன்மடங்கு அதிகமாக விளைச்சல் ஏற்பட்டுள்ளது.

ஏராளமான இந்த உபரி அரிசியைப் பாதுகாப்பது ஜப்பானுக்குப் பெரும் பிரச்னையாகவும் தலைவலியாகவும் ஆகிவிட்டது.

அரிசியை மூட்டை கட்டிக் கட்டித் தண்ணீருக்குள் இறக்கிப் பாதுகாக்கும் புதுமையானவழியை ஜப்பானியர் கண்டுபிடித்துள்ளனர். இந்த விதமாக அரிசியைப் பாதுகாக்க முடியுமா என்று ஜப்பானியர்கள் சோதனை நடத்தி வருகின்றனர்.

120 கிலோ கிராம் பிடிக்கும் ரப்பர் பைகளில் அரிசியைப் போடுவார்கள். ரப்பர் பைகளின் உட்புறத்தில் நைலான் லைனிங் கொடுத்துத் தைக்கப்பட்டு இருக்கும். பிறகு இந்த அரிசிப் பைகள் கீட்டோ என்னும் இடத்தில் சுத்தமான தண்ணீர் உள்ள பிவா என்னும் ஒரு பெரிய ஏரியில் ஆழ்த்தி விடுவார்கள். இந்த ஏரியில் 45 அடி முதல் 60 அடி வரை உள்ள ஆழத்தில் இந்த அரிசியை 6 மாதங்களுக்குப் பாதுகாக்க முடியுமாம்.

இந்தச் சோதனைகள் வெற்றி பெற்றால், 10 லட்சம் டன் உபரி அரிசியை மேற்கூறிய ஏரியில் ஆழ்த்திப் பாதுகாக்க ஜப்பான் உத்தேசித்திருக்கிறது,

—“தினமணி”

சென்னை உதவிபெறும் ஆரம்பப் பள்ளி
நிர்வாகிகள் சங்கம்

※

26—12—1968 மாலை 5-30 மணிக்கு ஜி. ராஜமன்னார் செட்டி பள்ளியில் எ. ஆர். சேஷாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

1969-ஆம் ஆண்டிற்காக கீழ்க் கண்டவர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

தலைவர் :	திரு. எ. ஆர். சேஷாசலம்
உபதலைவர் ;	திரு. பி. வீரராகவன்
	திரு. வி. எம். கடிகாசலம்
	திரு. வி. எ. பாலகிருட்டிணன்
செயலாளர் :	திரு. எம். ஆர். சோமசுந்தரம்
பொருளாளர் :	திரு. வி. எம். ராஜாராம்
நிர்வாகக்குழு அங்கத்தினர்கள் :	திரு. கே. எம். ஆறுமுகம்
	திருமதி லலிதா
	திரு. தானியேல்
	திரு. சுந்தரமூர்த்தி
	திரு. எ. கே. எஸ். சர்மா
	திரு. எம். எஸ், சீனிவாசன்
	திரு. ஜார்ஜ்
	திரு. டி. இராமாநுஜாச்சாரி

பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. தற்போதுள்ள ஆரம்பக் கல்வி சம்பந்தமான விதிகளை புதுப்பித்து வெளியிடுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. தமிழ் நாட்டு மேல் சட்ட சபையிலும் இதர கல்வி ஸ்தாபனங்களிலும் எங்கள் சங்கத்திற்குப் போதிய பிரதி நிதித்துவம் அளிக்குமாறு வேண்டப்படுகிறது.

3. ஆரம்பக் கல்விக்காக ஒரு தனி ஆலோசனைக் குழுவை நியமிக்குமாறு வேண்டப்படுகிறது.

4. 1969-70-ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் சேர்ந்தாற்போல 8-ஆம் வகுப்புப் பொதுத் தேர்வை அரசாங்கமே ஏற்று நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. தமிழ் நாட்டின் அரசின் ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட வெள்ளை அறிக்கை சுமார் பத்து ஆண்டுகட்கு முன் வெளியிடப் பட்டது. இதை ஆராய்ந்து தக்க சிபார்சுகளை வெளியிடுவதற்காக தமிழ் நாட்டின் சிறந்த கல்வி நிபுணர்களையும், தனியார் தொடக்கப் பள்ளி, நடு நிலைப் பள்ளி நிர்வாகிகளின் பிரதி நிதிகளையும் கொண்ட ஒரு விசாரணைக் குழு (Committee) உடனே அமைக்கும்படி வேண்டப் படுகிறது.

ம. இரா. சோமசுந்தரம்,

செயலாளர்.

17—2—1969.

சென்னை உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

❋

14—2—1969இல் ஜி. இராஜமன்னூர் பள்ளியில் சங்கத் தலைவர் திரு. எ. ஆர். சேஷாச்சலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்கள்.

1. நமது மதிப்பிற்குரிய தலைவரும், மாண்புமிகு முதலமைச்சரு மான திரு. சி. என். அண்ணாதுரை, எம்.எ. அவர்களின் திடீர் மறைவு குறித்து எங்களது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது வருத்தத்தை திருமதி ராணிஅண்ணாதுரை அவர்கட்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

2. தமிழ் நாட்டுக் கல்வி மந்திரி மாண்புமிகு திரு. எஸ். மாதவன் அவர்களைப் பேட்டி காணுவதென்றும், அவரிடம் பள்ளி நிர்வாகத்தில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் எடுத் துக்கூற குறிப்புகள் (Memorandum) தயாரித்துக் கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

3. தமிழ் நாட்டு ஆரம்பக் கல்வியின் சட்டதிட்டங்களைப் புதிப் பித்து வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. தமிழ் நாட்டு அரசின் ஆரம்பக் கல்வி சம்பந்தப்பட்ட வெள்ளை அறிக்கை சுமார் பத்து ஆண்டுகட்கு முன் வெளி யிடப்பட்டது. இதை ஆராய்ந்து தக்க சிபார்சுகளை வெளியிடுவதற்காக தமிழ் நாட்டின் சிறந்த கல்வி நிபுணர் களையும் தனியார் தொடக்கப் பள்ளி நிர்வாகிகளின் பிரதி நிதிகளையும் கொண்ட ஒரு விசாரணைக் குழு (Committee) அமைக்க வேண்டப்படுகிறது. தமிழ் நாட்டு

மேல் சட்ட சபையிலும் இதர கல்வி ஸ்தாபனங்களிலும் தொடக்கப் பள்ளி நடுநிலைப்பள்ளி நிர்வாகிகள் சங்கத்திற்குப் போதிய பிரதி நிதித்துவம் அளிக்குமாறு கோரப்படுகிறது.

6. ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தைக் கருதி, இதற்கென ஒரு தனி ஆலோசனைக் குழுவை நியமிக்குமாறு அரசாங்கத்தை வேண்டப்படுகிறது.

7. ஹையர் கிரேட் சம்பளம் வாங்கும் செகண்டரிகிரேட் ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளியில் எந்த வகுப்பு எடுத்தாலும் செகண்டரி கிரேட் சம்பளத் தொகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கீழ்க் கண்ட அங்கத்தினர் மந்திரியைச் சந்திக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

1. எ. ஆர். சேஷாசலம் (தலைவர்)
2. பி. வீரராகவன் (உபதலைவர்)
3. வி. எ. பாலகிஷ்ணன் (உபதலைவர்)
4. வி. எம். கடிகாசலம் (உபதலைவர்)
5. எம். ஆர். சோமசுந்தரம் (செயலாளர்)
6. வி. எம். ராஜாராமன் (பொருளாளர்)

ம. இரா. சோமசுந்தரம்,

செயலாளர்,

17—2—1969.

செய்திச் சுருள்

வசதி, வாய்ப்பு இருந்தும் முன்னேறுதது ஏன்?

தொழிலதிபர் பிர்லா கூறும் காரணங்கள்

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றமும், தொழிற்சாலைகள் உற்பத்தியும் முடங்கியிருப்பதற்குக் காரணம் என்ன? சீனுவுடனும் பாகிஸ்தானுடனும் நடந்த இரண்டு யுத்தங்களும் அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகள் பருவ மழை தவறியதுமே இதற்குக் காரணம் என்று பலர் அடிக்கடி சொல்லுகிருர்கள். ஆனுல் இந்தியாவில் பிரபல தொழிலதிபரான திரு. ஜி. டி. பிர்லா இதை ஒப்புக்கொள்ளவில்லை.

புதிய முயற்சிகளில் இறங்க வேண்டுமென்ற ஊக்கம் இல்லை. கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும் என்ற மனப்பான்மையும் இல்லை. நமது முன்னேற்றமும் தடைப்பட்டிருப்பதற்கு இதுதான் காரணம் என்று பம்பாய் கைத் தொழில் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் திரு. பிர்லா இன்று கூறினுர்.

வேலை செய்வதற்கு ஆள் பலம் நிறைய இருக்கிறது. தொழிற்சாலைகளின் உற்பத்தி சக்தி பெருமளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படாமல் கிடக்கிறது. மூலப் பொருள்களுக்குப் பஞ்சமில்லை.

பாங்குகளில் பணம் உபயோகிக்கப்படாமல் தூங்கிக் கொண்டிருக்கிறது. உற்பத்திக்குத் தேவையான வசதிகள் யாவும் இருக்கின்றன. ஆனுல் ஊக்கமோ, கடின உழைப்போ தான் காணும் என்ருர்.

சென்ற சில வருஷங்களில் பொருளாதார, கைத் தொழில் துறைகளில் மந்த நிலை ஏற்பட்டிருப்பதற்கு வெளி நாடுகளிலிருந்து, சுலபமாக உதவிப் பணம் கிடைத்துக் கொண்டிருந்ததும் இரண்டாவது திட்ட காலத்தில் கண் மூடித்தனமான செலவு தான் காரணம் என்று பிர்லா கூறினுர். மேலும், தொழிற்சாலைகள் சர்க்காரிலிருந்தும், சர்க்கார் தொடர்புள்ள ஸ்தாபனங்களிடமிருந்தும் தமது உற்பத்திகளுக்கு ஆர்டர் கிடைக்கும் என்று அளவுக்கு மீறி நம்பிக்கை வைத்திருந்தன.

ஆனுல், நிலைமை இப்போது மாறுதலடைந்து கொண்டிருக்கிறது. தேவையான பொருள்களுக்கு மார்க்கெட் கிடைத்து வருகிறது. தொழிற்சாலைகளும் அந்தத் தேவைகளைச் சமாளிக்க வேலை செய்துக் கொண்டிருக்கின்றன. என்ருர்.

கிராமங்களில் ஹோமியோபதி மருத்துவ மனைகள்

மாநில அரசுகளுக்கு மத்திய மந்திரி யோசனை

கிராமங்களில் ஹோமியோபதி வைத்திய சாலைகளைத் திறந்து அவ்விடங்களில் தகுதியுள்ள டாக்டர்கள் குடியேறுவதற்கு உதவுவது

பற்றி ராஜ்ய சர்க்கார்கள் பரிசீலிக்கலாம் என்று மத்திய சுகாதார மந்திரி இன்று யோசனை தெரிவித்தார்.

சுகாதார மந்திரி திரு. சத்திய நாராயண சின்ஹா இன்று இங்கு 17-வது அகில இந்திய ஹோமியோபதி மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசினார். அவ்வாறு கிராமங்களில் ஹோமியோபதி வைத்திய சாலைகளைத் திறந்து வைத்தால், ஆண்டுதோறும் ஹோமியோபதி வைத்தியத் துறையில் புதிதாக டிப்ளோமா பெறும் ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மேலும் போதிய வைத்திய வசதிகளைப் பெறாத கிராமங்களில் 80 சதவிகிதம் பேருக்கு அதனால் வைத்திய வசதி கிடைக்க வழி ஏற்படும் என்றார் அவர்.

கிராமப் புற ஹோமியோபதி வைத்தியக் கமிட்டி சிபாரிசுகளின் படி குறைந்த பட்சம் 100 ஹோமியோபதி வைத்திய சாலைகளையாவது திறக்குமாறு ஒவ்வொரு ராஜ்ய சர்க்காரும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் சொன்னார்.

ஹோமியோபதி வைத்தியப் பாடங்களை நன்கு படித்துப்பயிற்சி பெற்றவர்களையே வைத்தியத் தொழில் நடத்த அனுமதிக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

4 வருஷ டிப்ளாமா படிப்பை மேற்கொள்வதற்காக 40-க்கு அதிகமான ஹோமியோபதி கல்லூரிகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளதைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

ஹோமியோபதி ஆஸ்பத்திரியுடன் கூடிய கல்லூரிகளுக்கே ராஜ்ய ஹோமியோபதி போர்டுகள் அங்கீகாரம் அளிக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ராஷ்டிரபதிக்கான கௌரவ ஹோமியோபதி வைத்தியராக உள்ள டாக்டர் ஜுகல் கிஷோர் மகா நாட்டில் தலைமையுரையை நிகழ்த்துகையில் சக்தி மிக்க அல்லோபதி மருந்துகள் காரணமாகவே நோய்கள் தோன்றுவதாகக் கூறினார்.

எல்லாவிதமான நோய்களுக்கும் ஹோமியோபதி வைத்தியத்தில் நிவாரணம் இருப்பதாகவும் அவர் கூறினார்.

அல்லோபதி வைத்திய கல்லூரிகளில் இதர வைத்திய முறை பாடங்களும் போதிக்கப் பட வேண்டும்.

அல்லோபதி வைத்திய கல்லூரி பாடத் திட்டம் ஹோமியோபதி, ஆயுர் வேத வைத்திய பாடங்களும் இடம் பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இதர வைத்தியத் துறை கல்வி போதனை ஆரம்பத்திலிருந்தே மேற்கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு அவர் மேலும் சொன்னார்.

எல்லா வைத்தியக்கல்லூரிகளில் ஹோமியோபதி பிரிவுகளை சர்க்கார் ஏற்படுத்தி ஹோமியோபதி முறையில் போதனைக்கும் வைத்தியம் பார்க்கவும், ஆஸ்பத்திரிகளில் சில படுக்கைகளை ஒதுக்க வேண்டும் என்றார்.

பொருளாதாரத் துறை முடிவு களில் வீண் தாமதம்

நடைமுறைகளை மாற்ற டாடா கோரிக்கை

பொருளாதாரத் துறையில் கொள்கைகளை வகுத்து, முடிவு செய்வதற்கான ஏற்பாடுகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று பிரபல தொழிலதிபர் திரு. டாடா இன்று வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் வற்புத்தியிருக்கிறார். இந்த ஏற்பாடுகளை மாற்றி அமைத்தால் தான் அனாவசியமான காலதாமதங்களின்றி துரிதமாக முடிவுகள் செய்ய முடியும் என்று அவர் கூறுகிறார்.

இன்று நாட்டின் முன்புள்ள முக்கிய பிரச்னைகள் பொருளாதாரத் தன்மை வாய்ந்தவைகளேயொழிய அரசியல் தன்மை வாய்ந்தவையல்ல. பொருளாதாரத் துறையில் சர்க்கார் அனாவசியமான அதிகாரங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்குத் தேவையே இல்லை.

எந்தப் பொருளாதார பிரச்னை இருந்தாலும், ஒன்றன் பின் ஒன்றாகப் பல கமிட்டிகளின் பரிசீலனைக்கு அனுப்பும் வழக்கத்தையும் அகற்ற வேண்டும்.

சர்க்காரின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றி இந்த நாட்டில் தனியார் துறையிலோ, சர்க்கார் துறையிலோ எந்தத் தொழிலையும் நடத்த முடியாது.

பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளிலும் பொருளாதாரத் துறையில் கட்டுப்பாடுகள், சர்க்கார் துறை என்றெல்லாம் இருக்கின்றன. ஆனால் இங்கிருப்பதைப் போன்ற சர்க்கார் சிரப்பந்தங்கள் அங்கு கிடையாது.

நம்முடையநடைமுறைகளை அவர்களுடைய நடைமுறைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது பலனுள்ளதாயிருக்கும் என்று திரு. டாடா தனது அறிக்கையில் கூறியிருக்கிறார்.

ரூ. 200 கோடி முதலீட்டுடன் டாடா கம்பெனியார் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள உரத் தொழிற்சாலைக்கு சர்க்கார் சீக்கிரம் அங்கீகாரம் அளிப்பார்களென்று தான் நம்புவதாகவும் டாடா கூறுகிறார்.

நாட்டுக்கு அவசியமான இந்தத் தொழிற்சாலையைத் தாமதித்துக் கொண்டேயிருப்பதால் பெரும் அளவில் அன்னியச் செலாவணி நஷ்டமாகிறது. ஏற்கனவே இதனால் ஒன்பது மாதங்களில் ரூ. 67·5 கோடி மதிப்புள்ள அன்னியச் செலாவணி நஷ்டமாகி விட்டது. ஒவ்வொரு மாத தாமதத்திற்கும் ரூ. 7·5 கோடி—மணிக்கு ரூ. 1 லட்சம் வீதம் நஷ்டமாகும். அரசியல் காரணங்களுக்காகத்தான் சிலர் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்று டாடா தன் அறிக்கையில் கூறியிருக்கிறார்.

—“ தினமணி ”

இளைஞர் சமுதாயத்திற்கு ஆலோசனை

[இ. மு. முகம்மதுபுகாரி, கடையநல்லூர்]

*

"இளைஞனே! நீ அறிவோடு பிழைத்துக்கொள்வாயாக! காலைப் பொழுது ஒளிர்ந்து கொண்டிருக்கும் போதே, சிந்திக் கிடக்கும் மலர்களை நீ பொறுக்கிக் கொள்வாயா!" என்று கூறுகிறது ஒரு பழமொழி.

நவீன உலகில் இளம் மாணவர்களின் பொன்னான சக்தியை விரயப்படுத்த வல்ல பரவலான சூழ்நிலைகள் பெருகி வருவதைக் காண்கிறோம். அரசியல், கலை, பொழுது போக்கு, மனமகிழ்ச்சிக்காகச் செய்யப்படும் இன்ன பிற காரியங்கள் யாவற்றிலும், இளைஞர்களைப் பராக்கு காட்டி விடும் தன்மைகள் மலிந்திருக்கின்றன. மாணவப்பருவம் என்பது கற்பதற்கும், பழகுவதற்கும், உணர்வதற்கும், உரிய பயிற்சிக் காலமாகும்.

ஆனால் சில துறைகளில் ஈடுபாடு கொள்வதற்கோ, தலையீடு செய்வதற்கோ, அல்லது நிர்வகிப்பதற்கோ, உரிய பக்குவத்தை இந்தப் பருவத்தில் பெற்றிருக்க முடியாது. இவ் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கை தேவை. இத்துறைகள் மாணவர்களை வலிந்திழுத்து அவர்களது கல்வியையும் இன்னும் பல ஆக்க முயற்சிகளையும் பாழ்படுத்தி விடுகின்றன.

காலம் விலை மதிப்பற்றது என்று சொல்லுவார்கள். காலத்தோடு காரியமாற்றும் பண்பை, ஓர் கை தேர்ந்தவித்தையாக்கி விட வேண்டும். எண்ணமும் செயலும் இயன்ற வரை பலன் மிக்கதாக எழுச்சியுணர்வோடு இணைந்ததாக இருக்கட்டும். செயலின் தரமறிந்து அவசியம், அவசரம் ஆகியவற்றின் அடிப்படையில் முக்கியத்துவம் கொடுத்தல் நலம். காலத்தை தவற விடுவது போன்று, வேறு எதுவும், அவ்வளவு சுலபத்தில் ஏமாற்ற முடியாது. ரயிலில் செல்லும் ஒரு பிரயாணி, தான் இறங்க வேண்டிய இடம் வருவதற்குள்ளாகச் சிறிது நேரம் கண்ணயர்ந்து எழுந்திடலாம் என்று படுத்தவர், எழுந்து கண்களை கசக்கிக் கொண்டு பார்க்கும் பொழுது, இறங்க வேண்டிய இடம் கடந்து வெகு தூரம் சென்று விட்டதைக் காணும் பொழுது மிகுந்த ஏமாற்றமும், பரபரப்பும் அடைவார். இத்தனை ஏமாற்றமும் பரபரப்பும் மெத்தனத்தின் காரணமாக ஏற்பட்டுவிடும். எனவே இதில் மிகுந்த விழிப்புணர்ச்சி வேண்டும். அதிலும் மாணவப் பருவ காலம் கிடைத்தற்கரிய பேறு மிக்கது. அதில் பருவமறிந்து பக்குவமாக ஊன்றப்படும் வித்து தான் எதிர்

காலத்தில் மரமாக, பயிராக, காய்கனி, மலர்களாகப் பலன் தர வேண்டும்

தற்போது மேற்கொள்ளும் நன் முயற்சி கண் எதிரே பலன் தரா மற் போகலாம். ஆனால் செய்யப் படும் முயற்சிகள் யாவற்றிற்கும் உரிய பலன்கள், ஒரு புறத்தில் அறிந்தோ, அறியாமலோ நிச்சயம் விளைகின்றன. அது இன்றோ பின்னரோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூடும். அதுவரை பொறுமையுடனும், ஓர் உயரிய இலக்கினை நோக்கிச் செல்லுகிறோம் என்ற உணர்வுடனும், காரியம் நிறைவேற்றுவது கடமை

செல்வமும், சிறப்பும், வசதியும் இருந்தாலன்றி, எந்த முயற்சியிலும் முன்னேற்றம் காண முடியாது என்ற மனப்பான்மை பல மாணவர்களிடம் ஏற்படுவதுண்டு. ஒரு வகை தாழ்வு தரும் உணர்ச்சி, தனக்கும் முன்னேற்றத்திற்கும் வெகு தூரம் என்ற விரக்தியான எண்ணமுடனும் பல மாணவர்கள் வாழுகின்றனர். ஆனால், உண்மையான திறமையின் வளர்ச்சிக்கு, இவை ஒரு பொருட்டல்ல என்ற நிலையை உருவாக்கிடல் வேண்டும். அப்படி உருவாக்கிய பல பெரியோர் உண்டு. யாவற்றிற்கும் மேலாக, யாவும் கடந்த எல்லாம் வல்ல இறை நம்பிக்கையைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் வேறு என்ன தான் வேண்டும்?

மாணவர்கள் யாவரும் மகத்தான எதிர்காலத்தை மனதிற் கொள்ள வேண்டும். கற்பதைப் புறக்கணித்து அல்லது ஆய்ந்தோய்ந்து பாராமல், எந்தக் காரியத்தையும் சாதிக்க எண்ணுதல் கடினமானது. கற்க வேண்டியவற்றை முறையோடு கற்று, அதன்படி ஒழுகுதலுடன் இதற்குப் புறம்பான கருத்துக்களை விட்டும் இயன்றவரை விலகி விட வேண்டும். முன்னேற்ற முயற்சியில் தளர்வின்றி வெற்றி காண விழைதல் வேண்டும். இவ்வாறு செய்து மாணவர் பெறும் வெற்றி, மாணவர்களுக்கு மட்டும் உரியதன்று. அவர்களை ஈன்றெடுத்த பெற்றோருக்கும் அவர்களின் அறிவை உருவாக்குவதற்கு முன்னின்ற ஆசிரியருக்கும், கிடைக்கின்ற மாபெரும் வெற்றியாகும் !

"ஈன்ற பொழுதினும் பெரிது
உவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட
தாய்"

—"நல்வழி"

நோயற்ற வாழ்வு

பெ. திருகூடசுந்தரம், எம்.ஏ., பி.எல்., சென்னை.

கீழ்க்கண்ட நான்கு பயிற்சிகளும் மிகவும் எளிதானவை.

பிந்திய 4-ம் கருவுற்ற பெண்களும், முதல் இரண்டை பிரசவித்த பெண்கள் பிரசவித்த மறு நாள் முதலும் செய்ய வேண்டியவை என்று மருத்துவ நூல்கள் கூறுகின்றன. ஒவ்வொன்றையும் 10 தரம் செய்தால் போதும். தினந்தோறும் தவறாமல் செய்வதே முக்கியமானது.

1. மல்லாந்து படுத்துக் கைகளைத் தலைக்குப் பின்னால் நீட்டி, கால்களை வளையாமலும் தூக்காமலும் மெதுவாக நிமிர்ந்து, கைகளைக் கொண்டு கால் பெருவிரலைத் தொடவேண்டும். இவ்வாறு பயின்றால் தொடும்போதே மூக்கைக் கொண்டு முழங்காலைத் தொடும் நிலை வரும்.

2. மல்லாந்து படுத்துக் கைகளைப் பக்கத்தில் நீட்டி வைத்துக் கொண்டு, கால்களை வளையாமல் தூக்கித் தலைக்குப் பின் கொண்டு போக வேண்டும். இவ்வாறு பயின்றால் கால்களைக் கொண்டு தலைக்குப் பின் தரையைத் தொடும் நிலை வரும்.

3. நிமிர்ந்து நின்று கைகளை வளையாமல் தலைக்கு மேல் தூக்கி, கால்களை வளையாமல் மெதுவாகக் குனிந்து, கைகளைக் கொண்டு கால் பெருவிரலைத் தொட வேண்டும். இவ்வாறு பயின்றால் உள்ளங்கைகளைத் தரையில் ஊன்றும் நிலை வரும்.

4. நிமிர்ந்து நின்று இரு கைகளால் இடுப்பைப் பிடித்துக் கொண்டு பின்னால் சாயக்கூடிய அளவு சாய்ந்து, பின் நிமிர வேண்டும். இவ்வாறு 10 தரம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட உடற் பயிற்சி முறைகளை அனுசரித்து நடப்பவர்கள் நீண்ட காலம் நோயின்றிச் சுகமாகவும் பலமாகவும் வாழ்வார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

—“நல்வழி”

அண்ணாவின் இறுதிக் கட்டுரை

முதலும் இறுதியுமாக அமைந்த இத் தைப்பொங்கலன்று தன் தம்பிக்கென்று அண்ணா தீட்டிய இறுதிக் கட்டுரையை இதயத்தில் பீறிட்டெழுந்த துக்கத்தோடு வெளியிடுகிறோம்.

—ஆசிரியர்.

●

எந்தப்பணி எனக்கு இனிப்பும் எழுச்சியும் தந்து வந்ததோ, எந்தப் பணியிலே நான் ஆண்டு பலவாக ஈடுபட்டு வந்திருந்தேனோ, எந்தப்பணி மூலம் என்னை உன் அண்ணனாக நீ உள்ளன்புடன் ஏற்றுக்கொண்டு, பெருமிதத்துடன் உலகுக்கு அறிவித்து வந்தனையோ, எந்தப்பணிவாயிலாக என்கருத்துக்களை உனக்கு அளித்து உன் ஒப்புதலைப் பெற்று, அந்த கருத்துக்களின் வெற்றிக்கான வழியினைக் காண முடிந்ததோ, எந்தப் பணியின் மூலம் தமிழகத்தை அறியவும் உலகத்தை உணரவும், தமிழ்ப் பண்பை நுகரவும் வழி கிடைத்து வந்ததோ, அந்தப் பணியினை முன் போல செய்ய முடியாதவனாக்கப்பட்டு, முடியவில்லையே என்ற ஏக்கத்தால் தாக்கப்பட்டு, சூழ்நிலையால் கைதியாக்கப்பட்டு கிடக்கிறேன் என்பதனை அறிவாய்.

"சூழ்நிலையின் கைதி"—என்ற சொற்றொடருக்குத்தான். "முதல் அமைச்சர்" என்று முத்திரையிட்டு இருக்கிறார்கள்.

தவிப்பு

"தம்பி! தம்பி! தம்பி!" என்று கிழமை தவறாமல், பலப் பல ஆண்டுகள் உன்னை அழைத்து உரையாடி அளவளாவி வந்திருக்கிறேன். இரண்டு ஆண்டுகளாக, அந்த விருந்தினை இழந்து தவிக்கின்றேன்.

முதல்—அமைச்சர் என்ற முறையில் பல பிரச்சினைகள் பற்றிய கருத்துக்கள், அறிக்கைகள், சொற்பொழிவுகள், சட்டமன்ற உரைகள் மூலம் நாட்டுக்கு தந்துவிட முடிகிறது—ஆனால் தனிமையாக உன்னிடம் உரையாடி மகிழ்ந்திட என்று நான் வகுத்துக் கொண்ட "கிழமைக் கடிதம்" எழுதிட இயலவில்லை.

எனக்குத் தோன்றும் எண்ணங்களை உன்னிடம் கூறுவதிலே, தனியானதோர் மகிழ்ச்சி; எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியினை உன்னோடு பங்கிட்டுக் கொள்வதிலே ஓர் இன்பம்! கவலை குடையும் போது

மன உளேச்சல் ஏற்படும்போது, உன்னேடு உரையாடி, "தம்பி உடையான் படைக்கு அஞ்சான்" என்று எழுச்சி பெற்று வந்தேன்.

ஏக்கம்

ஆனல் இப்போது அந்த இன்ப நாட்களே எண்ணி எண்ணி ஏக்கம் கொள்கிறேன். சுமக்கும் பளுவினுலே கூனிக்குறுகிவாடுகிறேன். எத்தனே எத்தனேயோ பிரச்சினேகளேப் பற்றிய கருத்துக்களேக் கூற, நேரமோ, வாய்ப்போ இன்றித் தவித்திடுகிறேன்.

ஆயினும், முன்பு செலவிட்டதைக் காட்டிலும் அதிக நேரம், வேலேக்காக ஒதுக்குகிறேன். இலக்கியச்சுவை நுகர்ந்திட நேரமில்லே. கலே அழகினே எண்ணிட நேரமில்லே. வேலே! வேலே! வேலே! ஓயாதவேலே! உடலும், உள்ளமும் அலுத்துப் போகும் அளவுக்கு வேலே. கடமையை நிறைவேற்றிக் கொண்டு இருக்கவே நேரம் போதவில்லே-களிப்பு பெற்றிட, உன்னிடம் உரையாடிட நேரத்தைக் கண்டறிவதே மிகச் சங்கடமாகிவிட்டது.

உடல் நிலே

என்மனதுக்கு இனிமை தந்திடும் பணியிலே என்னே ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லேயே என்ற கவலே ஒருபுறம். அத்துடன் பின்னிப் பிணேந்து கொண்டு என் உடல் நிலேயைப் பற்றிய கவலே ஒருபுறம்.

என்பேரப் பெண், இளங்கோவன் மகள் கண்மணி தன் மழலே மொழியில் பாடுகிருள், "நலந்தானு? நலந்தானு? உடலும் உள்ளமும் நலந்தானு?" என்று. எனக்கென்னமோ அந்த பாட்டைக் கேட்கும் போதெல்லாம், என் தம்பிகள், தங்கைகள், நாட்டின் நல்லோர் அனேவரும் என்னே "நலந்தானு?" என்று கேட்பது போலவே தோன்றுகிறது.

கவலே

கடந்த ஓராண்டாகவே இந்தக் கேள்வி கிளம்பியபடி இருந்தது. அமெரிக்கா சென்று அறுவை சிகிச்சை செய்து கொள்ளவேண்டிய அளவுக்கு, உடல் நலம் பாழ்பட்டது.

ஆனல், அதனுல் ஏற்பட்ட கவலேயை தள்ளும்விதமான அன்பும், கனிவும் நாடு முழுவதிலும் இருந்து கிடைத்தது. அரசியலில், நம்மோடு மாறுபட்டு இருப்பவர்களிலே பலரும் கனிவு காட்டிடக் கண்டேன். மனிதத் தன்மை அடியோடு மடிந்து விடவில்லே என்பதனே உணர்ந்தேன்.

நம்பிக்கை

அந்த மனிதத்தன்மையிலே தான் முழுக்க முழுக்க நம்பிக்கை கொண்டு இருக்கிறேன். மனிதத் தன்மை திகழ்ந்திடச் செய்வதைக் காட்டிலும், மகத்தான வேறெரு வெற்றி இல்லே என்றே கருதுகிறேன்.

என்றால், எந்தப் பிரச்சினையையும் மனிதத்தன்மை கலந்ததாக மட்டுமே கொள்ள முடிகிறது. அதனால், கொடுமை நேரிட்டு விடும்போது, குமுறிப்போகிறேன். அக்கிரமம் நடைபெறும் போது, நெஞ்சில் வேல் பாய்கிறது.

பாதிப்பு

இந்தநிலை, உடலைப்பாதிக்கிறது; மருத்துவர்கள் பலர் என் உடல் நிலை தேறிடத்துணை நிற்கின்றனர்.

ஆனால், உன் புன்னகை தவழும் முகத்தை மனக்கண்ணால் காணும் போதுதான் உண்மையான ''மாமருந்து'' கிடைக்கிறது.

கடமை

தம்பி! காலம் மதிப்பு வாய்ந்தது. கடமை உணர்ந்த நீ, காலத்தையே கனியச்செய்திடும் ஆற்றல் படைத்த நீ, தமிழக அரசியலையே மாற்றி அமைத்த நீ, உன் கடமையைச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருப்பாய் என்பதனை நான் நன்கு அறிவேன்.

என்னைப் பொறுத்தமட்டிலே, நலிவைத் தாங்கிக் கொண்டபடி என்றால் இயன்றதை செய்து கொண்டு வருகிறேன்.

—''தினத்தந்தி''

"ஆரம்பக் கல்வி"
ஆபீஸ்.
94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு
அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–00

பிராவிடெண்ட் பண்டு
கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–00

பள்ளியில் பிள்ளைகளைச்
சேர்க்கும் விண்ணப்பத்
தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1–00

வருடாந்திர பிராவிடெண்ட்
பண்டு சரிபார்த்தனுப்பும்
பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–00

Form of Certificate of
income
வருமான நற்சாட்சிப்
பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–00

தபால் செலவு பிரத்தியேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை
அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

மகாத்மாவின் மணிமொழி

மதத்திலிருந்து அரசியலைத் துண்டித்து விட்டால், அதன்பின் அரசியலுக்குப் பொருளேயில்லை. அரசியல் என்பது நம் வாழ்வில் ஓர் அங்கம். எனவே, நம் தேசிய அமைப்புக்கள் பற்றி நாம் அறிய வேண்டியதே. குழந்தைப் பருவத்திலிருந்தே இதைச் செய்யலாம்.



ஆயினும் நமக்கு மத நம்பிக்கை என்ற பொய்யாத, சலனமற்ற ஒளியும் தேவை. அறிவை மட்டும் கவரும் நம்பிக்கை போதாது. நம் இதயத்திலேயே அழிக்கமாட்டாமல் எழுதப்படும் நம்பிக்கை வேண்டும். நமது மத உணர்வை நாமே முதலில் புரிந்து கொள்ளவேண்டும். இதைச் செய்த மாத்திரத்தில், வாழ்க்கையின் சகல துறைகளும் நமக்கு வெட்ட வெளிச்சமாகின்றன. அப்போதுதான் (அரசியல் உட்பட்ட) வாழ்க்கைப் போராட்டத்தை ஏற்றுப் போரிடுவதற்கான ஆயுதங்கள் நமக்குக் கிடைக்கின்றன. இளைஞர்களுக்கு இவ்வுணர்வை ஏற்படுத்துவது நம் புனிதக் கடமை. ஆனால் இன்று நடப்பது என்னவெனில், நாட்டு அரசியல் வாழ்க்கையில் பெரும் பகுதி மட்டுமே இளைஞர்களுக்கு உரியதாக உள்ளது. படிப்பு முடிந்தவுடன், அவர்கள் அரசியலை முற்றிலும் மறந்து, ஆண்டவனைப் பற்றியும் ஏதும் அறியாதவர்களாக, நீசமான உத்தியோகங்களை நாடி ஓடுகின்றனர். அவர்களுக்கு ஆண்டவன் இல்லை; அதாவது ஜீவசக்தி நிறைந்த காற்று இல்லை. பிரகாசமான ஒளி இல்லை. சக்தி வாய்ந்த உண்மைச் சுதந்திரமுமில்லை.

அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு

●

லட்சக்கணக்கான தமிழர்களால் அன்புடன் 'அண்ணா' என்று அழைக்கப்படும் தமிழ் நாடு முதல் அமைச்சர் காஞ்சீபுரம் நடராஜன் அண்ணாதுரை 15-9-1909-ல் பிறந்தார். அவர் முதலில் காஞ்சீபுரத்தில் கல்வியைத்தொடங்கி சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 1935-ல் எம்.ஏ. பட்டம் பெற்றார்.

திரு. அண்ணாதுரைசிறிது காலம் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு அவர் நீதிக் கட்சியில் சேர்ந்தார். அப்போது ஈ. வெ. ராமசாமி நாயக்கர் நீதிக் கட்சியில் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தார். 1944-ல் திரு. ராமசாமி நாயக்கர் திராவிடக் கழகத்தை அமைத்த போது, அதில் திரு. அண்ணாதுரை சேர்ந்தார். பிறகு திராவிடக் கழகத்தின் பொதுக் காரியதரிசியாகப் பொறுப்பேற்றார். விடுதலை பத்திரிகையின் ஆசிரியர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டது.

ஈ. வெ. ரா. வின் கொள்கை பூராவையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை 1947-ல் இந்தியா விடுதலை பெற்றபோதுஅதைத்துக்க நாளாக ஈ. வெ. ரா. வர்ணித்தார். ஆனால் அண்ணாதுரை அதை மகிழ்ச்சி நாள் என்று கூறினார். 1949-ல் திரு. ராமசாமி நாயக்கருடன் கடுமையான கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டதன் காரணமாக, திரு. அண்ணாதுரை தம்முடைய சகாக்களுடன் திராவிடக் கழகத்திலிருந்து வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தை அமைத்தார். 18 ஆண்டுகளில் அதிகாரத்தைக் கைப்பற்றும் அளவுக்கு இந்தக் கட்சி வளர்ந்தோங்கியதற்கு அண்ணாதுரையே காரணம்.

ஏழு முறை சிறை சென்றார்

அரசியலில் புகுந்ததிலிருந்து அவர் 7 முறை சிறை சென்றிருக்கிறார். 1938-ல் ராஜாஜி முதல் மந்திரியாக இருந்தபோது இந்தி போதனையை அமல் நடத்துவதை எதிர்த்து திரு. அண்ணாதுரை கிளர்ச்சி செய்தார். அப்போது அவர் முதல் தடவையாகச் சிறை சென்றார். அவருக்கு 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1952-1953-ல் ராஜாஜி முதல் மந்திரியாக இருந்தபோது 'மும்முனைப் போராட்டம்' என்னும் கிளர்ச்சியை ஆரம்பித்து திரு. அண்ணாதுரை 3 மாதம் சிறைத் தண்டனை பெற்றார். அப்போது ராஜாஜியின் கல்விக் கொள்கையை எதிர்த்து அவர் கிளர்ச்சி செய்தார். மற்றும் டால்மியா புரத்திற்கு மீண்டும் 'கல்லக்குடி' என்ற பழைய பெயர் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், ராஜ்ய எல்லை மாறுதல்களைப் பற்றிச் சில தமிழ்த் தலைவர்

கள் எடுத்துக் கொண்ட நிலையைப் பற்றி பண்டித நேரு தெரிவித்த சில கருத்துக்களைக் கண்டனம் செய்வதற்காவும் அவர் கிளர்ச்சி நடத்திஞர்.

1964-ல் அரசியல் சட்டப் பிரதியைக் கொளுத்த முயன்றதற்காக அவருக்கு மேலும் 6 மாதம் சிறைத் தண்டனை கிடைத்தது.

ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த போது, அவரையும், பண்டித நேருவையும் எதிர்த்துக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற போதும், விலை எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு ஆர்பாட்டங்களில் கலந்து கொண்டதற்காகவும் திரு அண்ணுதுரை சில சந்தர்ப்பங்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

நாட்டு நலனில் நாட்டம்

தென்னுட்டில் தனிச் சுதந்திர திராவிட நாடு அமைக்கப்பட வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. பிரிவினை இயக்கங்களைத் தடைசெய்து பார்லிமெண்ட் சட்டம் இயற்றிய பிறகு தனித் திராவிட நாடு கோரிக்கையை 1965-இல் திரு. அண்ணுதுரையின் யோசனைக்கிணங்க திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டது.

இந்தியா மீது சீனு ஆக்கிரமிப்புச் செய்ய ஆரம்பித்ததும், நாட்டைக் காக்க தி. மு. க. ஒத்துழைப்பும், ஆதரவும் அளிக்க முன் வந்தது. நாட்டின் நலனையே முக்கியமாகக் கருதியது.

பல்வகைத் திறன்கள்

ஆங்கிலத்திலும், தமிழிலும், திரு. அண்ணுதுரை நாவீறு மிக்கவர். அவர் தமிழில் சிறந்த எழுத்தாளர். அவருடைய நாவன்மையினுல் தி. மு. க வின் செல்வாக்கு அதிகரித்து வந்தது. 1957-ல் தான் முதல் தடவையாக தி.மு க. அசெம்பிளி தேர்தலில் போட்டியிட்டது. 1957-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது அசெம்பிளியில் 15 தி. மு. க. மெம்பர்கள் இருந்தனர். 3-வது அசெம்பிளியில் தி.மு.க. மெம்பர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்தது. 1967-ல் நடந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியாகிய காங்கிரசுக்கு சவால் விடுத்து அதைத் தோற்கடிப்பதற்கு திரு. அண்ணுதுரையே தி. மு. க. வுக்கு வழி காட்டினுர். தமிழ் நாட்டில் 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு திரு. அண்ணுதுரையின் தலைமையில் முதலாவது திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபை 1967 மார்ச்சில் பதவி ஏற்றது.

1957-ல் திரு. அண்ணுதுரை முதன் முதலில் ராஜ்ய அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1962-ல் அவர் அவருடைய சொந்தத் தொகுதியாகிய காஞ்சீபுரத்தில் தோற் கடிக்கப்பட்டார். பின்னர் அவர் ராஜ்ய சபையில் அண்ணுதுரை நிகழ்த்திய முதல்

பிரசங்கத்தை சபையில் உள்ள சகல பிரிவினரும் பாராட்டினர். அவர் ஒரு சிறந்த தலைவர் என்பதை அவருடைய முதல் பிரசங்கம் உணர்த்தியது. 1967—இல் நடைபெற்ற தேர்தலில் திரு. அண்ணாதுரை தென் சென்னை தொகுதியிலிருந்து லோகசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், அந்த ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்து ராஜ்ய மேல் சபை தேர்தலுக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்

திரு. அண்ணாதுரை சொந்தமாக 1942-ல் "திராவிட நாடு" என்ற வார ஏட்டை தொடங்கினார். பிறகு "காஞ்சி" என்னும் வார ஏட்டை 1967 வரை நடத்தி வந்தார். 1957-ல் 'ஹோம் லண்ட்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையை ஆரம்பித்தார். தமிழில் பல நூல்களை எழுதியிருக்கிறார். அவர் பல தமிழ் சினிமாக்களுக்குக் கதை, வசனம் எழுதியுள்ளதோடு பல நாடக பாத்திரங்களிலும் நடித்துள்ளார்.

படி அரிசித் திட்டம்

முதலமைச்சர் பதவி வகித்த காலத்தில் சென்னை, கோயமுத்தூர் பகுதிகளில் ரூபாய்க்குப் படி அரிசி போடும் திட்டத்தை மேற்கொண்டார். இந்தியை ஆட்சி மொழியாகத் திணிப்பதை எதிர்த்து அசெம்பிளியில் இரு மொழி தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார்.

மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று அண்ணாதுரை மத்திய சர்க்காருடன் வாதாடி வந்த போதிலும், கேரள அரசாங்கத்தைப் போல நெருக்கடி எதையும் அவர் உண்டு பண்ணவில்லை. தம்முடைய கொள்கைகளைப் பின்பற்றுவதில் அவர் நிதானத்துடன் நடந்து கொண்டார்.

முதல் தடவை யு. எஸ். விஜயம்

1968 ஏப்ரலில் அமெரிக்கா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அண்ணாதுரை விஜயம் செய்தார். அமெரிக்காவில் இருந்த போது யேல் சர்வகலாசாலையில் 5 நாள் தங்கியிருந்தார். நியூயார்க்கில் ஐ. நா. காரியதரிசி ஊதாண்டைச் சந்தித்தார்.

அமெரிக்கா போகும் வழியில் ரோம் சென்று போப்பாண்டவரைச் சந்தித்தார்.

ஏப்ரல் 15-ம் தேதி சென்னையை விட்டுப் புறப்பட்ட அண்ணாதுரை ஒரு மாத கால சுற்றுப் பயணம் செய்து விட்டு மே. 13-ந் தேதி சென்னை திரும்பினார்.

—"தினமணி"

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசாங்க விருதுகள்

※

1967-68 ஆம் ஆண்டிற்கு, அரசாங்க விருதுக்குரிய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாநிலக் கமிட்டி, ஒரு கல்வி மாவட்டத்துக்கு இரண்டு பேர் விதம் 70 பேர்களைத் தெரிந்தெடுத்திருக்கிறது. தமிழ் நாடு அரசாங்க பிரதம கல்வி ஆலோசகர் திரு. என். டி. சுந்தரவடிவேலு இக் கமிட்டியின் தலைவராகவும், பள்ளி கல்வி இயக்குநர். டாக்டர் எம். டி. பால், உறுப்பினராகவும் பணியாற்றினர்.

இந்த விருது பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 200 ரொக்கப் பரிசும், ரூ. 30 பெறுமான வெள்ளி பதக்கமும், ஒரு சான்று பத்திரமும் வழங்கப்படும்.

விருது பெற்றவர்கள் விவரம்

நாமக்கல்: திரு. எஸ். சுப்ரமணியன், தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, படவீடு; திரு. கே. என். குப்பைய்யர் ஆசிரியர் திருவேங்கட விலாஸ், உயர்தர ஆரம்பப் பள்ளி, ராசிபுரம்.

தர்மபுரி: குமாரி எஸ். கன்னியம்மாள் ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, புதுப் பட்டி: திரு. எஸ். செபாஸ்டியன், தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுத்தரப்பள்ளி, நார்த்தம் பட்டி.

சேலம்; திரு. ஐ. அந்தோணி, தலைமை ஆசிரியர் செயின்ட் பால்ஸ் இளநிலை ஆதாரப் பள்ளி, மரவனேரி, சேலம்-7; திரு. எம். குழந்தை, தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, கெரிக்கட்டாம்பாளையம், ஆட்டையாம்பட்டி.

திருப்பத்தூர்: திரு. டி. மோசக், தலைமை ஆசிரியர், இளநிலை ஆதாரப் பள்ளி. கழிஞ்சூர், காட்பாடி; திரு. கே. ராஜமாணிக்கம், தலைமை ஆசிரியர், இந்து உதவிபெறும், ஆரம்பப் பள்ளி, வாணியம்பாடி.

திருவண்ணாமலை: திரு. கே. என். வடிவேல் பிள்ளை தலைமை ஆசிரியர், நடேச பிள்ளை உதவி பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளி, திருவண்ணாமலை: திரு. எஸ். கோவிந்தசாமி பிள்ளை ஆசிரியர், கரையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, காலூர்.

வேலூர்: திரு. ஏ. எம். எஸ். சர்மா ஆசிரியர், மாளவியா உதவி பெறும் உயர்தர ஆரம்பப் பள்ளி, அன்னாந்தலை; திரு. ஆர். சீனிவாசன் ஆசிரியர், பனவரம் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி.

நாகப்பட்டினம்: திரு. பி. ராஜகோபாலு, ஆசிரியர், சீதாலட்சுமி உயர்நிலை ஆதாரப் பள்ளி, அறக்கரை: தோப்புத்துறை; திரு. ஆர். கோவிந்தராஜன், தலைமையாசிரி

யர், லட்சுமி விலாஸ் உயர்தர ஆரம்பப் பள்ளி, நீடாமங்கலம்.

மாயவரம்; திரு. டி. எம். எஸ். சுவாமிநாதன், தலைமையாசிரியர் ஸ்ரீ கல்யாணிஸ்வரி வித்தியாலயா உயர்தர ஆரம்பப் பள்ளி, மழையூர்; திரு. கே. என். வெங்கடராமன், தலைமையாசிரியர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, வைத்தீஸ்வரன் கோயில்.

தஞ்சாவூர் மேற்கு: திரு. வி. தங்கராஜன், ஆசிரியர், கலைமகள் உதவி பெற்ற உயர்தர ஆரம்பப் பள்ளி, துறவிக்காடு; திரு எம் தங்கையன், தலைமையாசிரியர், ஊராட்சி ஒன்றிய உயர்தர ஆரம்பப் பள்ளி, திருக்காட்டுப்பள்ளி.

விருத்தாசலம்: திரு. வி. கோவிந்தசாமி, ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, சித்தலிங்கமடம்; திருமதி தங்கபாப்பம்மாள், ஆசிரியர் மங்களூர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, திட்டகுடி.

விழுப்புரம்: ஆர். அன்னமேரி, தலைமையாசிரியை, செயின்ட் பிலோமினு இளநிலை ஆதாரப் பள்ளி, திண்டிவனம்; திரு. பி. சின்னப்பா, தலைமையாசிரியர் முஸ்லிம் வளர்நிலை ஆதாரப் பள்ளி, திண்டிவனம்.

கடலூர்: திரு. சி. குப்புசாமி, ஆசிரியர் வளர்நிலை ஆதாரப் பள்ளி, முள்ளிப்பள்ளம்; திரு. எம். கன்னியப்பன், தலைமையாசிரியர் என். எல். சி. ஆரம்பப் பள்ளி, நெய்வேலி-1.

திருவள்ளூர்: திரு. கே. ஜெயராம் நாயுடு, ஆசிரியர் ஊராட்சி ஒன்றிய இளநிலை ஆதாரப் பள்ளி, பெரம்பாக்கம்; திரு பி. வாசுதேவபிள்ளை. உயர்தர ஆரம்பப் பள்ளி தண்டலம்.

செங்கற்பட்டு: திரு. கே. எம். நரசிம்மராகவன், தலைமையாசிரியர் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி, ஒழுவெட்டி மதுராந்தகம்; திரு. வி. ஜி. வரதபட்டாச்சாரியார், தலைமையாசிரியர் ஊராட்சி ஒன்றிய வளர்நிலை ஆதாரப் பள்ளி, வள்ளிபுரம்.

சைதாப்பேட்டை: திரு. பி. சீனிவாசன், தலைமையாசிரியர் நகராட்சி உயர்தர ஆரம்பப் பள்ளி, ஆதம்பாக்கம், திருமதி ஜூலி பிரான்சிஸ், தலைமையாசிரியை, மவுண்ட் இளநிலை ஆதாரப் பள்ளி சென்னை-16.

சென்னை தெற்கு: திரு. ஆர். டேனியல் தலைமை யாசிரியர். ஆரம்பப் பள்ளி (அரிசன நலப் பள்ளி) சென்னை-4; திரு. எஸ். சங்கர நாராயணன், தலைமையாசிரியர் பால மந்திர் ஆரம்பப் பள்ளி, சென்னை-17.

சென்னை வடக்கு; குமாரி டி. எஸ் வெங்கடேசம்மாள் தலைமையாசிரியை, மாநகராட்சி ஆரம்பப் பள்ளி, அமைந்தகரை; திரு. தியாகராஜ் அபிரகாம் தலைமையாசிரியர். மாநகராட்சி மேல்நிலை ஆரம்பப் பள்ளி, பெரம்பூர். —"**தினமணி**"

காந்திஜி சுட்டிக்காட்டிய ஏழு கொடுமைகள்
இன்றைய சமுதாயத்திற்குத் திரு. கிரி உணர்த்துகிறார்

கொள்கைகள் இல்லாத அரசியல், உழைக்காமல் பெறும் செல்வம், மனச் சாட்சியைப் புறக்கணித்து அடையும் இன்பம், குணம் இல்லாத அறிவு, நியாயம் இல்லாத வர்த்தகம், மனிதத் தன்மையற்ற விஞ்ஞானம், தியாக மனப்பான்மையோடு கூடியதாக இல்லாதபிரார்த்தனை ஆகிய ஏழு கொடுமைகளும் உலகத்தை வருத்துவதாக காந்திஜி அன்று தீர்க்க தரிசனத்துடன் கூறினார். இன்றைக்கும், உலகமும், இந்தியா யாவும் அதே கொடுமைகளால் அல்லலுறுகின்றன என்று உப ராஷ்டிரபதி திரு. வி. வி. கிரி இன்று சென்னையில் கூறினார்.

தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் காந்திஜிபுகைப் படக் கண்காட்சியை உப ராஷ்டிரபதி திறந்து வைத்தார். இந்தியாவில் இன்று தோன்றியுள்ள எல்லாப் பிரச்னைகளுக்கும் இந்தக் கொடுமைகளே மூல காரணம். தேசம் முன்னேறுமலிருப்பதற்கும் இவையே காரணம் என்றார் உப ராஷ்டிரபதி. இதை தமது நாட்டு மக்கள் விரைவில் உணர்ந்து இந்தக் கொடுமைகளை வீழ்த்துவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறு செய்தால் தான் உலக நாடுகளிடையே இந்தியா உன்னதமான இடத்தைப் பெற முடியும் என்று அவர் கூறினார்.

காந்திஜி தம் வாழ்நாள் முழுவதும் உண்மையை உயிர் மூச்சாகக் கொண்டிருந்தார். உண்மையே இறைவன் என்று அவர் கருதினார். அஹிம்சை நெறி இறைவனை அடைவதற்கான மார்க்கம் என்று அவர் கூறினார். அரசியலுக்கே அவர் ஒரு புது உருவம் தந்தார் என்றார் உபராஷ்டிரபதி.

காந்திஜி உழைப்பில் நம்பிக்கை கொண்டிருந்தார். வாழ்க்கை என்பது இடைவிடாமல் செயல் படுவதே என்று அவர் கருதினார். அநியாயமான வழிகளைக் கடைப்பிடித்து நியாயமான முடிவுகளை அடைய முடியாது. ஒன்றிலிருந்து மற்றொன்றை நீக்க இயலாது. முடிவுகள் நியாயமானவைகளாக இருந்தால் வழிகள் எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்ற கோட்பாட்டை காந்திஜி ஒரு போதும் ஒப்புக் கொள்ளவில்லை என்று உபராஷ்டிரபதி கூறினார்.

பொது வாழ்வில் தன்னலமற்ற சேவை, நேர்மையான நடத்தை என்ற சீரிய வழிகளை காந்திஜி வகுத்துத் தந்திருக்கிறார். உலக மக்கள் அனைவரும் அமைதியாகவும், இன்பமாகவும் வாழ்வதற்கான மார்க்கங்களாக அவை திகழுகின்றன என்று உப ராஷ்டிரபதி குறிப்பிட்டார்.

ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

இரண்டாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சிறுவர் வரலாறு	0·50	—	—
சிறுவர் பூகோளம்	0·60	—	—
சிறுவர் கணக்கு நூல்	0·75	—	—
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·40	—	—

மூன்றும் வகுப்பு

சிறுவர் வரலாறு	0·60	—	—
சிறுவர் பூகோளம்	0·60	—	—
சிறுவர் கணக்கு நூல்	0·87	37	18—5—66
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·50	—	—

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

நான்காம் வகுப்பு

சிறுவர் வரலாறு	0·87	11	18—5—66
சிறுவர் பூகோளம்	0·62	19	18—5—66

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சிறுவர் கணக்கு நூல்	1·25	3	24—5—67
இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்	0·75	6	18—5—66

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

ஐந்தாம் வகுப்பு

சிறுவர் வரலாறு	1·00	42	18—5—66
சிறுவர் பூகோளம்	1·00	19	18—5—66
சிறுவர் கணக்கு நூல்	1·50	4	17—5—67
சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்	1·25	9	18—5—66

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

ஆறாம் வகுப்பு

மாணவர் வரலாறு	1·00	54	18—5—66
புதுமுறை நில நூல்	2·00	13	24—4—68
புதுமுறை சங்கக் கணிதம்	1·50	50	18—5—66
பொது விஞ்ஞானம்	1·25	25	18—5—66
அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்)	0·62	22	18—5—66

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·50	49	18—5—66

ஏழாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·50	18	17—5—67
புதுமுறை நில நூல்	1·50	4	24—5—67
புதுமுறை சங்கக் கணிதம்	1·75	4	24—5—67
பொது விஞ்ஞானம்	1·50	15	17—5—67
மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்)	1·00	7	17—5—67
Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்)	0·60	9	17—5—67

எட்டாம் வகுப்பு

புதுமுறை வரலாறு	1·80	36	17—5—67
புதுமுறை நில நூல்	1·80	40	17—5—67
புதுமுறை சங்கக் கணிதம்	2·00	4	24—5—67
பொது விஞ்ஞானம்	2·00	4	24—5—67
நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல்	1·00	7	24—4—68

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

சிந்தனைச் செல்வங்கள்

[தொகுப்பு : துரை. முருகேசன், காரமடை]

1. யாரை நம்பினாலும் நம்பாவிட்டாலும் சுயநலம் இல்லை என்று சொல்பவனைச் சுலபத்தில் நம்பி விடாதே.

—டெனிக்லான்.

2. காலம் என்கிற கோயிலுக்கு கடமை என்பது பொற்கலசம் போன்றதாகும். ஆகவே, உன் கடமையை உரிய காலத்தில் செய்.

—டி. எம்மென்.

3. விதி மனிதனின் கையைப் போன்றது. அதனால் நெருப்பை அணைக்கவும் முடியும் ; தூண்டி விடவும் முடியும்.

—பைரன்.

4. உன் வேலையில் சலிப்புத் தோன்றுமேயானால் அதிலிருந்து தப்புவதற்கு ஒரே ஒரு சிறந்த வழிதான் உண்டு. அவ்வேலையை மேலும் சிறப்பாகச் செய்வது பற்றிச் சிந்திப்பதே அவ்வழி.

—விட்டிங்.

5. தொழில் இல்லாத வாழ்வு குற்றம். கலை இல்லாத தொழில் மிருகத் தனம்.

—ரஸ்கின்.

6. பிச்சையெடுப்பது கோழையின் கவசமாகும்.

—புல்வர்க்.

7. வீரனுக்கு நாடு சொந்தம் ; கோழைக்குக் காடு சொந்தம்.

—நெப்போலியன்.

8. உன்மகன் உனக்கு எம்முறையில் பணிவிடை செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அம்முறையில் நீ உன் தாய் தந்தைக்குப் பணிவிடை செய்.

—தர்மசக்கரம்.

9] தூங்காதிருந்து நமது செயல்களையெல்லாம் பார்வையிட்டுக் கொண்டிருப்பது மன சாட்சி !

—யாரோ.

10. பிரார்த்தனை யானது காலையின் திறவு கோல் ; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின் போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்கள் இல்லாத இதயம் படைத்திருப்பது மேலானது.

—காந்தியடிகள்.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஒன்பதாம் வகுப்பு	2·00	—	—
பத்தாம் வகுப்பு	2·00	59	17-5-'67
பதினோராம் வகுப்பு	2·50	24	24-4-'68

திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

பத்தாம் வகுப்பு	2·25	45	17-5-'67

TAMIL GRAMMER

இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் **சொ. முருகேசனார்**

ஒன்பதாம் வகுப்பு	2·00	—	—
பத்தாம் வகுப்பு	2·00	5	24-5-'67
பதினோராம் வகுப்பு	2·00	20	25-4-'68

தமிழ்த் துணைப்பாட நூல்

உரிமைக் குரல்

ஆசிரியர் : **வித்துவான் வே. வேதாசலம்**

ஒன்பதாம் வகுப்பு	1·25	—	—

மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : **வித்துவான் வே. வேதாசலம்**

பதிப்பாசிரியர் : புலவர். **தணிகை உலகநாதன்**

பத்தாம் வகுப்பு	1·25	49	17-5-'67

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(ஆரம்பக்கல்வி நிலையம்)

94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

சிந்தனைச் செல்வங்கள்

[தொகுப்பு : துரை. முருகேசன், காரமடை]

1. யாரை நம்பினாலும் நம்பாவிட்டாலும் சுயநலம் இல்லை என்று சொல்பவனைச் சுலபத்தில் நம்பி விடாதே.

—டெனிக்லான்.

2. காலம் என்கிற கோயிலுக்கு கடமை என்பது பொற்கலசம் போன்றதாகும். ஆகவே, உன் கடமையை உரிய காலத்தில் செய்.

—டி. எம்மென்.

3. விதி மனிதனின் கையைப் போன்றது. அதனால் நெருப்பை அணைக்கவும் முடியும்; தூண்டி விடவும் முடியும்.

—பைரன்.

4. உன் வேலையில் சலிப்புத் தோன்றுமேயானால் அதிலிருந்து தப்புவதற்கு ஒரே ஒரு சிறந்த வழிதான் உண்டு. அவ்வேலையை மேலும் சிறப்பாகச் செய்வது பற்றிச் சிந்திப்பதே அவ்வழி.

—விட்டிங்.

5. தொழில் இல்லாத வாழ்வு குற்றம். கலை இல்லாத தொழில் மிருகத் தனம்.

—ரஸ்கின்.

6. பிச்சையெடுப்பது கோழையின் கவசமாகும்.

—புல்வர்க்.

7. வீரனுக்கு நாடு சொந்தம்; கோழைக்குக் காடு சொந்தம்.

—நெப்போலியன்.

8. உன்மகன் உனக்கு எம்முறையில் பணிவிடை செய்ய வேண்டும் என்று விரும்புகிறாயோ அம்முறையில் நீ உன் தாய் தந்தைக்குப் பணிவிடை செய்.

—தர்மசக்கரம்.

9] தூங்காதிருந்து நமது செயல்களையெல்லாம் பார்வையிட்டுக் கொண்டிருப்பது மன சாட்சி!

—யாரோ.

10. பிரார்த்தனை யானது காலையின் திறவு கோல்; மாலையின் தாழ்ப்பாள். பிரார்த்தனையின் போது இதயமில்லாத சொற்கள் படைத்திருப்பதைவிட, சொற்கள் இல்லாத இதயம் படைத்திருப்பது மேலானது.

—காந்தியடிகள்.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWS
" ARAMBAKKALVI "

FORM IV

(See Rule 8)

1. Place of Publication..........................Madras.

2 Periodicity of its publication............Monthly.

3. Printer's Name..............................P. Veeraraghavan.

Nationality...............Indian.

Address...........94–95, New Street, Mannady,
Madras-1.

4. Publisher's Name.........................P. Veeraraghavan.

Nationality...........Indian.

Address...........94–95, New Street, Mannady,
Madras-1.

5. Editor's Name...............................P. Veeraraghvan.

Natioanlity...........Indian.

Address...........94–95, New Street, Mannady,
Madras-1.

6. Name and addresses of individuals who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total share capital.

P. Veeraraghavan,
94–95, New Street,
Mannady, Madras-1.

I, P. VEERARAGHAVAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd.) P. VEERARAGHAVAN,
Publisher,
" Arambakkalvi "